Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JUNE 19, 2021

சனிக்கிழமை ஜூன் 19, 2021 | ஒளி: 07 கதிர்: 26 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# 'குரலை உணர்ந்தேன்; தீர்மானம் எடுத்தேன்'

"நீங்கள் ஏன் மீண்டும் பாராளுமன்றத்துக்குச் செல்கிறீர்கள் எனப் பலர் கேட்டனர். உண்மையில் எனக்குப் பாராளுமன்றத்துக்கு செல்ல வேண்டுமென்ற எந்த எதிர்பார்ப்பும் இருக்கவில்லை" எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, "பாரிய அழுத்தங்கள் வந்தன. நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரமடைந்துள்ளது. எவ்வித கட்டுப்பாடும் இல்லை. நினைத்ததை விட அதிகமானோர் உயிரிழக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் குரல் எழுப்ப வேண்டுமென நான் உணர்ந்ததால், பாராளுமன்றத்துக்கு வர தீர்மானித்தேன்" என்றார்.

தொடர்ச்சி P2



சேதனப் பசளை உற்பத்தி

# ஹெக்டேயருக்கு 10ஆயிரம் ரூபாய்

சேதனைப் பசளை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஹெக்டேயருக்கு 10,000 ரூபாய் வீதம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான சேதனப் பசளையை உற்பத்தி செய்து வழங்குவது குறித்து விவசாய அமைச்சில் நேற்று (18) நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை

# 'தரவுகளே நீடித்தன'

## ஜனாதிபதி விளக்கம்

## இரட்டைப் பதிவுகள் காரணம்



நாட்டில் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளை, ஜூன் மாதம் 14ஆம் திகதியன்று தளர்த்துவதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மரணங்கள் தொடர்பில் கிடைத்த தவறான தரவுகளின் காரணமாகவே ஜூன் 21 வரை அதனை நீட்டிக்க வேண்டி ஏற்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பயணக்கட்டுபாடு

## திங்கள் நீக்கப்படும்; புதன் அமலாகும்

### மாகாணங்களிடையே மாறாது



ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்கு அமைய, தற்போது அமலில் உள்ள, பயணக்கட்டுப்பாடு ஜூன் 21 அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என, கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 24 மணி நேரத்தில் இறுதிக்கிரியை

கொரோனா வைரஸ் தொற்றாலன்றி ஏற்படுகின்ற மரணங்களின்போது, இறுதிக் கிரியைகளை 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். கொவிட் ஒழிப்புக்கான விசேட குழு, நேற்று (18)

தொடர்ச்சி P2

## தயா, அஜித்துக்கு புதிய பதவிகள்






இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக செயற்பட்ட ஜெனரல் (ஓய்வு) தயா ரத்நாயக்கவுக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர், கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக நேற்று (18) நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2


## கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பலில் எண்ணெய்க் கசிவு



கொழும்புத் துறைமுகத்தில் இருந்து மேற்கு வங்காளத்தின் ஹால்டியாவுக்கு சென்று கொண்டிருந்த எம்வி டெவன் என்ற சரக்குக் கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், கப்பலுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை.

தொடர்ச்சி P2

## பிரான்ஸ் செல்ல முற்பட்ட மாங்குளம் யுவதி அகப்பட்டார்



டி.கே.ஜி.கபில

போலி தகவல்களைச் சமர்ப்பித்து, கட்டார் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட யுவதியொருவர், நேற்று (18) அதிகாலை விமான நிலைய குடிவரவு- குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# முட்டை விலை கூடும்?

## கோழி இறைச்சிக்கு சிக்கல்



முட்டை உற்பத்தி செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகளால் வெகு விரைவில் முட்டை விலையை அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பானது, முட்டை விநியோகஸ்தர்களுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேபோல் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் மீண்டும் திறக்கப்படுமாயின் தேவையானளவு முட்டையை விநியோகிக்க முடியாது போகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

அத்தியாவசிய சேவைகள் தொடர்பில்

# விசேட வர்த்தமானி வெளியானது




இலங்கையில் பயணக் கட்டுப்பாடு அமலில் உள்ள காலப்பகுதியில் மக்களுக்கு தடையின்றி அத்தியாவசிய பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## புழு நோய்க்குப் பிடித்த சிறுவர்



நாட்டில் சிறுவர்கள் மத்தியில் பூனை, நாய்கள் மூலம் டோக்ஸோகாரியாசிஸ் (toxocariasis) எனப்படும் புழு நோய் தாக்கம் காணப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா, நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

திருமண நிகழ்வில் கலந்துகொண்ட

## 13 பேருக்கு கொரோனா




எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்த 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## 130 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் காங்கேசன்துறையில் இருவர் கைது




றொமேஸ் மதுசங்க

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 130 கிலோ 760 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர், யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 'அநாமதேய அழைப்புகளுக்கு இரையாக வேண்டாம்'

### பொலிஸார் எச்சரிக்கை



ஜே.ஏ. ஜோர்ஜ்

கொரோனா வைரஸ் தொற்றால் பயணக்கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பல்வேறு நபர்களால் மோசடியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 'குருந்தூர் மலையை விரைவில் மீட்போம்'


விஜயரத்தினம் சரவணன்


"முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புப் பகுதியில், தற்போது பௌத்த மயமாக்கல் முற்றுகைக்குள் உள்ள தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை விரைவில் மீட்போம்" என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கை மீனவர்கள் மீது தாக்குதல்

### இந்தியா மறுப்பு





சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடிக்கச்சென்ற இலங்கை மீனவர்கள் சிலர், இந்தியக் கடற்படையினரால் மோசமான முறையில் தாக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தியை, இந்தியா மறுத்துள்ளது. இந்திய கடற்படை அதிகாரிகளால் பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு தாங்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டதாக இலங்கை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2


கொரோனாவுக்கு மத்தியிலும்


## 'அபிவிருத்திகள் தொடரும்'

எந்தப் பிரச்சினைகள், சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டாலும் நாட்டை அபிவிருத்திச் செய்வதை தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தாதெனத் தெரிவிக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கொரோனா வைரஸ் நிலைமைகளுக்கு மத்தியில் அபிவிருத்திப் பணிகளை நிறுத்தப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பூட்டிய கடைகளை திறந்த இளைஞன் கைது





பயணக் கட்டுப்பாடு காரணமாக இரத்தினபுரி நகரில் நீண்ட நாள்களாக மூடப்பட்டுள்ள 07 வியாபார நிலையங்களில் தங்க நகை, பணத்தை திருடிய இளைஞன், நேற்று (18) கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்தினபுரி, கனாதோல பகுதியை சேர்ந்த சந்தேக நபரான குறித்த இளைஞன், பெற்றோரை இழந்த நிலையில் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## அதிக விலைக்கு விற்பவர்களுக்கு எச்சரிக்கை

அதிக விலையில் மரக்கறிகள், பழங்களை விற்பனை செய்யும் நடமாடும் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 'குரலை உணர்ந்தேன்; தீர்மானம் எடுத்தேன்'

பாராளுமன்ற உறுப்பினராக, ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்குமாறு உறுதிப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தல், நேற்று (18) மாலை வெளியாகியது.

இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டாவதாக, இலங்கையின் அரசியல் நிலைவரம் மிகவும் மோசமாகவுள்ளதெனத் தெரிவித்த அவர், அரசாங்கத்தின் புகழ் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதைத் தான் கண்டதில்லை. இதற்கான மாற்று வழியை பராளுமன்றத்தில் எதிர்க்கட்சி இன்னும் முன்வைக்கவில்லை. இவ்வாறான அரசியல் பின்னணி மற்றும் நிலையைத் தான் இதற்குமுன்னர் கண்டதில்லை என்றார்.

அரசியலும் குழப்பம், நாடும் குழப்பத்தில்; அதனால் எதிர்காலத்தில் என்ன நடக்குமென்பது எனக்கும் குழப்பமாக உள்ளதெனத் தெரிவித்த அவர், 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் பொருளாதார முகாமைத்துவத்துக்கே தான் முன்னுரிமை வழங்கியதாகத் தெரிவித்தார்.

ஆனால், கோட்டாபாய ராஜபக்ஷ நாட்டைப் பொறுப்பேற்றதன் பின்னர், வருமான வரியை நீக்கினார். உண்மையில் எமது வருமானம் குறைவடைந்தது.

வரிக் குறைப்பு செய்ததால் பாரிய பொருளாதார முன்னேற்றம் ஏற்படுமென தெரிவித்தனர். ஆனால், அது நடக்கவில்லை. நாட்டில் வருமானம் குறைவடைந்துள்ளதால் பணத்தை அச்சிட ஆரம்பித்துள்ளனர். பணம் அச்சிடப்படுவதால் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடையும். இதன் பிரதிபலனே எரிபொருள் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்றார்.

பல நாடுகள் கொரோனாவால் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்துள்ளன. அவ்வாறு சந்தித்த நாடுகள் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை செயற்படுத்துவதால் சர்வதேச நாயண நிதியம் அந்த நாடுகளுக்கு கடன் வழங்கியுள்ளது என்றார்.

# 'தரவுகளே நீடித்தன'

ஜூன் மாதம் 11ஆம் திகதியன்று, 101 மரணங்கள் பதிவானதாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில், ஜூன் 21 வரை பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கொவிட் ஒழிப்புக்கான விசேட குழு, நேற்று (18) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடிய போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதன் பின்னர், குறித்த மரணங்கள் ஏற்பட்டுள்ள விதம் பற்றி சுகாதார மற்றும் புலனாய்வுத் துறையின் ஊடாக மீண்டும் விரிவாக ஆராயப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் குறித்து, ஜனாதிபதி விரிவாக விளக்கமளித்துள்ளார்.

இதன்போது, சில மரணங்கள் பெப்ரவரி 06முதல் ஜூன் 11ஆம் திகதி வரையான 04 மாத காலப்பகுதியில் பதிவாகி, மரணச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அத்துடன், சில மரணங்கள் பற்றிய தகவல்கள், இரண்டு முறை பதிவிடப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

ஜூன் 11ஆம் திகதி இடம்பெற்ற மரணங்களின் எண்ணிக்கை, 15 மட்டுமே ஆகும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளின் போது, 101 மரணங்கள் அன்றைய தினம் பதிவாகவில்லை என்பது தெரியவந்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதனால், தரவுகளை வெளியிடும் போது சரியானதாகவும் இற்றைப்படுத்தப்பட்டதாகவும் இருப்பது, தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை கூடும்?

முட்டைகளை 21 நாள்கள் காலப்பகுதிக்குள் சிறந்த முறையில், வைத்துக்கொள்ள முடியும் என்பதுடன், குறித்த காலப்பகுதியில் முட்டை விற்பனையும் இடம்பெறுவது அவசியமாகும். அப்படியில்லையாயின் ஏனைய செலவுகளை சமாளிப்பதற்கு முடியாமல் போகுமெனத் தெரிவித்துள்ள அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், நாட்டின் தற்போதைய நிலையில், முட்டை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உற்பத்தி செலவு அதிகரிப்பால் கோழி இறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு வழங்க முடியாதிருப்பதாக கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சோளத்தின் விலை கிலோவொன்று 55 ரூபாயிலிருந்து 90 ரூபாய் வரை அதிகரித்துள்ள நிலையில் கோழி இறைச்சி உற்பத்தியின் செலவில் , 70 சதவீதம் கோழித் தீனிக்காக செலவழிக்க உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்

சோள இறக்குமதியை தடைசெய்த பின்னர், சோள விதையை பாரியளவில் இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களுக்கு மாத்திரம் வழங்குவதால், கோழித் தீனியின் விலை அதிகரித்துள்ளதென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## விசேட வர்த்தமானி...

அத்துடன், இது தொடர்பில் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் 10 அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் குறிப்பிடப்பட்டு அதிவிசேட வர்த்மானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அவற்றில் துறைமுகங்கள், பெட்ரோலிய தயாரிப்புக்கள், சுங்கம் மற்றும் ரயில்வே திணைக்களம் போக்குவரத்து முதலான விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தவிர, அனைத்து மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட நிர்வாக பிரிவுகள், மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்துக் காப்புறுதி சேவைகளும், கூட்டுறவு சதொச போன்ற மக்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் பிற நுகர்வோர் பொருட்களை வழங்கும் தொடர்புடைய நிறுவனங்களும் இந்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடகப்பட்டுள்ளன.

## திங்கள் நீக்கப்படும்; புதன் அமுலாகும்

எனினும், நீக்கப்படும் பயணக் கட்டுப்பாடு 23ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.00 மணிக்கு மீண்டும் அமல்படுத்தப்பட்டு, ஜூன் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணி வரை அமலில் இருக்குமென்றும் அவர் கூறினார்.இவ்வாறு பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும், அந்த நாள்களில் மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடு, தற்போது போன்றே தொடர்ந்தும் அமலில் இருக்கும் என இராணுவத் தளபதி குறிப்பிட்டார். பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலப்பகுதியில், பொதுமக்கள் ஒன்றுகூடல்கள், கூட்டங்கள் உள்ளிட்டவற்றிற்கும் தொடர்ந்தும் தடை விதிக்கப்படுவதாக, இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைமையை அரச நிறுவனங்கள் கடைப்பிடிக்குமாறும், தேவைக்கேற்ப குறைந்தளவிலான ஆளணியை கொண்டு தனியார் நிறுவனங்கள் பணிகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றி, வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி வழங்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.மே மாதம் 21ஆம் திகதியன்று அமல்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடுகள், அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, மே. 25ஆம் திகதியன்று தளர்த்தப்பட்டது.

அதன்பின்னர், வாரத்துக்கு வாரம் நீடிக்கப்பட்டு, ஜூன் 21ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 24 மணிநேரத்தில் இறுதிக்கிரியை

முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடிய போதே, ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, கொரோனா அல்லாத மரணங்களின்போது, பிசிஆர் பரிசோதனை காரணமாக இறுதிக் கிரியைகளை நடத்துவதில் தாமதங்கள் ஏற்படுகின்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் பொருளாதார மற்றும் ஏனைய கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களைத் தாக்கும்

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ள நிலையில், வீட்டில் உள்ள சிறுவர்கள் பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகளுடன் அதிக நேரம் செலவிடுகிறார்கள்.

இந்த நிலையில், பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகள் போன்ற சிறிய விலங்குகளின் உடலில் இந்த புழு தோற்றம் பெறுவதாக வைத்தியர் தெரிவித்தார்.

அத்துடன், அவ்வாறான விலங்குகளுடன் தொடர்பை பேணும் சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாவதுடன், ஆரம்ப கட்டத்தில் தோலில் புழுக்கள் ஏற்படும் என அவர் கூறியனார்.

பின்னர் அந்தப் புழுக்கள் குழந்தைகளின் கண்கள், மூளை மற்றும் நுரையீரலுக்குள் நுழைந்து கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இந்த நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டதாக தெரிவித்த அவர், இதுபோன்ற வீட்டு விலங்குகளுக்கு மருந்துகளை கொடுப்பதன் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

## தயா, அஜித்துக்கு புதிய பதவிகள்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் செல்ல முற்பட்ட மாங்குளம் யுவதி அகப்பட்டார்

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர், முல்லைத்தீவு- மாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (18) அதிகாலை 3.45 மணியளவில் கட்டார் நோக்கி புறப்படவிருந்த கியு.ஆர்.669 என்ற விமானத்தில் பயணிப்பதற்கு இந்த யுவதி விமானநிலையத்துக்கு வருகைத் தந்துள்ளார்.

இதன்போது, அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என அதிகாரிகளால் கண்டறியப்பட்டுள்ளதுடன், இந்த யுவதியால் விமான நிலைய அதிகாரிகளுக்கு சமர்ப்பித்துள்ள பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையும் போலியானதென கண்டறியப்பட்டுள்ளது.

## 13 பேருக்கு கொரோனா

சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களை மீறி, பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்த 78 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 13 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து குறித்த 13 பேரும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மணமக்கள் குடும்பத்தினரை மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, குருநகர் பகுதியில், கடந்த 14ஆம் இடம்பெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்ற 16 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிலிருந்து புறப்பட்ட..

இந்த எண்ணெய் கசிவு குறித்த தகவல்களை புதன்கிழமை (16) பிற்பகல் இந்திய கடலோர காவல்படையிடம், கடல்சார் மீட்பு மற்றும் ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.

மேலதிக விசாரணையில் சுமார் 120 கிலோ லீட்டர் கொள்ளளவு கொண்ட எம்.வி.டெவன் கப்பலின் இடது புற எரிபொருள் தாங்கியில், விரிசல் ஏற்பட்டமை தெரியவந்தது.

இந்த விரிசலின் விளைவாக 10 கிலோ லீட்டர் எண்ணெய் கடலில் சிந்திய நிலையில், மீதமுள்ள எண்ணெய் மற்றொரு தாங்கியில் மாற்றப்பட்டு, அதிக கசிவு தடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் 382 கொள்கலன்களில் 10,795 டன் சரக்குகள் ஏற்றிச் செல்லப்படுவதுடன், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 17 பேர் இக்கப்பலில் பணிபுரிகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னதாக இலங்கையுடன் இணைந்து இந்திய கடலோர காவல்படை மேற்கொண்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையில், எம்.வி. எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீ வெற்றிகரமாக அணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மீனவர்கள்...

இது தொடர்பில் ஊடகங்களில் நேற்று முன்தினம் (17) செய்தி வெளியான நிலையில், இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என, இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்திய கடற்படை மிகவும் ஒழுக்கமான மற்றும் தொழில்முறை நேர்த்தியுடன் தனது பொறுப்புகளை நேர்மையுடன் நிறைவேற்றுகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அனைத்து மீனவ பிரச்சினைகளையும் மனிதாபிமான முறையில் தீர்க்க இந்தியா உறுதிபூண்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, தாக்குதலுக்கு உள்ளான மீனவர்களுடன் இரண்டு படகுகள் நேற்று முன்தினம் (17) பிற்பகல் திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன், கடுமையான தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் மூவர், நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## 130 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன்...

காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து வடபகுதி கடற்படையினர், நேற்று (18) அதிகாலை சந்தேகத்துக்கு இடமான படகொன்றை சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, நான்கு கஞ்சா பொதிகளுடன் 26, 31 வயதுடைய, மன்னார் மற்றும் காங்கேசன்துறை பகுதியை சேர்ந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பவற்றை மேலதிக விசாரணைகளுக்கான காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## பூட்டிய கடைகளை...

இரத்தினபுரி நகரில் உள்ள மூன்று நகைக்கடைகள், ஆடை விற்பனை நிலையத்தின் களஞ்சியசாலை, இரண்டு ஹோட்டல்கள் மற்றும் டிஜிட்டல் அச்சகம் என்பவற்றில் குறித்த இளைஞன், பூட்டுகளை திறந்து கைவரிசையை காட்டியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விற்பனை நிலையங்களில் உள்ள சிசிடிவி கமெராக்களில் உள்ள காட்சிகளின் அடிப்படையில் குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 'அநாமதேய அழைப்புகளுக்கு...

அத்துடன், வீடுகளில் உள்ள நிலையான தொலைபேசிகளுக்கு அழைப்பு மேற்கொண்டு பொலிஸார், புலனாய்வாளர்கள் எனத் தெரிவித்து, மக்களிடம் பணம் கேட்டு அச்சுறுத்தும் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறான மோசடியாளர்களின் அழைப்புகள் குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று (18) அறிவுறுத்தினார்.

ஏப்ரல் - 21 தாக்குதல் சம்பவத்தை தொடர்புபடுத்தி இனந்தெரியாத நபர்களால் இவ்வாறான அழைப்புகள், பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் அழைப்புகளில் அதிகமானவை நிலையான தொலைபேசிகளுக்கு மேற்கொள்ளப்படுதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவங்களை காரணம் காட்டி, விசாரணை நடவடிக்கைகளுக்காக வங்கி கணக்குகளில் ஒரு தொகை பணத்தை வைப்பிலிடுமாறு மோசடியாளர்கள், பொதுமக்களை அச்சுறுத்துவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, இது போன்ற அழைப்புகள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவிப்பதுடன், மோசடியாளர்கள் கூறும் வங்கி கணக்குகளில் பணத்தை வைப்பிலிட வேண்டாம் என அவர் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் (17) இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் 03 தகவல் கிடைத்துள்ளதுடன், இவ்வாறான மோசடி அழைப்புகள் தொடர்பில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இதுவரை 50க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான அழைப்புகளை மேற்கொள்பவர்கள் பொலிஸ் அதிகாரிகள் அல்லது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் அல்லவென அவர் தெளிவுபடுத்தினார்.

## 'குருந்தூர் மலையை...

குருந்தூர் மலையை மீட்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து வழக்குத் தொடர்வதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வழக்குத் தொடர்வதற்கான ஆயத்தப் பணிகளில் பெரும்பாலான பணிகள் முடிவுக்கு வந்துள்ளதாகவும் எனவே, குருந்தூர் மலையை மீட்க விரைவில் வழக்கு தொடரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எமது பூர்வீக குருந்தூர்மலையில் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் செயற்பாட்டை தடுப்பதற்குமான முழுயற்சிகளையும் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்றார்.

## 'அபிவிருத்திகள் தொடரும்'

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அபிவிருத்தித் திட்டங்களின் தீமையானப் பக்கங்களை மாத்திரம் பேசுபவர்கள், அதன் நன்மைகளைப் பேசுவதில்லை எனவும் கூறிய அவர், இதனால் தற்போதைய அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை ஒருபோதும் நிறுத்தாதெனவும் தெரிவித்தார்.

## அதிக விலைக்கு...

பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி இதனை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தொழில்முனைவோர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்று குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என, அந்த செயலணியின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிலவும் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையை கட்டுப்படுத்தி, திறமையான விநியோகத்திற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் திறன் குறித்து நேற்று முன்தினம் (17) அலரி மாளிகையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## 150 அடி பள்ளத்தில் விழுந்து பஸ் விபத்து

### சாரதி பலி

■ க.மஹிந்தகுமார்

பலாங்கொடை- ராசகல பகுதியில் நேற்று முன்தினம் (17) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சாரதி உயிரிழந்தார்.

பலாங்கொடை -ராசகல பிரதான வீதியின், எல்ல வத்த பகுதியில் 150 அடி பள்ளத்தில் குறித்த பஸ் விழுந்துள்ளது.

உயிரிழந்த சாரதி, பலாங்கொடை -குருபவில பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

பின்னவல பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுடன் பயணித்த இந்த பஸ், அவர்களை இறக்கிவிட்டு திரும்பிய போதே, விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான போது, சாரதி மட்டுமே பஸ்ஸில் இருந்துள்ளதுடன், பலத்த காயங்களுக்கு உள்ளான அவர், பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.



தெஹிவளை மிருகக்காட்சி சாலையில்

# ஆண் சிங்கத்துக்கு கொரோனா


தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள சிங்கம் ஒன்றுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண் சிங்கமொன்றுக்கே இவ்வாறு கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அதனையடுத்து, அந்தச் சிங்கம், மிருகக்காட்சி சாலையிலுள்ள வேறோர் இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று நாள்களாக நோய்வாய்ப்பட்டிருந்த சிங்கத்துக்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் இருமல், தொண்டை நோவால் சிங்கம் அவதிப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அதன்பின்னர் சிங்கத்தின் சளி மாதிரி, பேராதனை கால்நடை மருந்துவ பீடத்துக்கு அனுப்பப்பட்டு, அது தொடர்பான மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குறித்த ஆண்



சிங்கத்துக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சி சாலையில் 8 வருடங்களாக வசித்துவரும் 'தோர்' என்ற இந்தச் சிங்கம், 2012ஆம் ஆண்டு தென் கொரியாவிலிருந்து

**“ மூன்று நாள்களாக நோய்வாய்ப்பட்டிருந்த சிங்கத்துக்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் இருமல், தொண்டை நோவால் சிங்கம் அவதிப்படுவது கண்டறியப்பட்டுள்ளது**

கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சிங்கத்துக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, சிங்கத்துக்குப் பொறுப்பாக இருந்த மூவரைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'தோர்' வசித்து வரும் பகுதியில், இவ்வாண்டு கொண்டுவரப்பட்ட 'ஷீனா' என்ற சிங்கமும், மேலும் 4 சிங்கங்களும் வசித்துவருகின்றன. இந்த விலங்குகளுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெஹிவளை மிருகக்காட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உலகின் பல்வேறு நாடுகளில் மிருகக்காட்சி சாலைகளிலுள்ள விலங்குகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தோணியில் விளையாடிய

## சிறுவன் ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு

■ ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தின் ஆயிலடிச்சேனை ஆற்றில் மூழ்கி, நாகராசா கரிசனன் என்ற 14 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் (17) மாலை 2.30 மணியளவில் தோணியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, காற்றின் வேகம் காரணமாக தோணி ஆற்றின் நடுப்பகுதிக்குச் செல்ல முற்பட்டுள்ளது.

இதனால் பயத்தின் காரணமாக தோணியில் இருந்த சிறுவன் ஆற்றில் பாய்ந்துள்ளார். இவ்வாறு ஆற்றில் பாய்ந்த சிறுவனை காப்பாற்ற அயலவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்த போதும், இறுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சிறுவனின் சடலத்தையே ஆற்றிலிருந்து மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுவனின் சடலம், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



கடந்த சனிக்கிழமையே

## 'தெமட்டகொடவை முடக்கிவிட்டோம்'

இந்திய கொரோனா வைரஸ் இனங்காணப்பட்டுள்ள தெமட்டகொட பிரதேசம், கடந்த சனிக்கிழமை (12) முதலே முடக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் தொற்று நோய் பிரிவு வைத்தியர் தினு குருகே தெரிவித்தார்.

தெமட்டகொடவில் எழுமாறானப் பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு பொரளை உள்ளிட்ட கொழும்பின் ஏனைய பிரதேசங்களிலும் எழுமாறானப் பி.சி.ஆர் பிரசோதனைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளைக் கொண்டவர்கள் உடனடியாக பி.சி.ஆர் பரிசோதனைகளை



மேற்கொள்ள வேண்டுமெனவும், கொழும்பு நகரில் தினந்தோறும் இயங்கும் பி.சி.ஆர் பரிசோதனை நிலையம் தொடர்பில் விரைவில் பொதுமக்களுக்கு அறிவிக்க உள்ளதாகவும் இந்த நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படும் பி.சி. ஆர் பரிசோதனை முடிவுகள் 8 - 10 மணித்தியாலங்களுக்கு அறிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தண்டவாள கிளிப்புகள் திருட்டு

### ஐவர் கைது

■ எம்.றொசாந்த்

நாவற்குழியில் ரயில் பாதையில் இருந்த தண்டவாள பொருத்துக் கிளிப்புகளை திருடிய மற்றும் வாங்கி குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் தண்டவாளத்தில் பொருத்துக் கிளிப்புகள், கடந்த 14ஆம் திகதி திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், திருடப்பட்ட தண்டவாளக் கிளிப்புகளை கொள்வனவு செய்து உடமையில் வைத்திருந்த 48 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர்.



அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அரியாலையைச் சேர்ந்த 24 வயதுக்குட்பட்ட நால்வர் தற்போது கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிளிப்புகள் கழற்றப்பட்ட நிலையில் ரயில்கள் பயணித்தால் தடம்புரளும் ஆபத்துக் காணப்பட்டதாக பொலிஸார் சுட்டிக்காட்டினார்.

பொலிஸாரால் கைதாகி மரணமடைந்த

## இளைஞனின் சடலத்தை தோண்டியெடுக்க உத்தரவு

### மீண்டும் பிரேத பரிசோதனை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, இருதயபுரம் கிழக்கு பகுதியில் கடந்த 3ஆம் திகதி இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மர்மமான முறையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்த இளைஞனின் சடலத்தை தோண்டியெடுத்து, இலங்கையிலேயே சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் முன்னிலையில் சடலத்தை மீண்டும் பிரேத பரிசோதனை செய்வதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் நேற்று (18) நடைபெற்றபோது இந்த உத்தரவு வழங்கப்பட்டதாக சிரேஷ்ட சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்தார்.

சந்திரன் விதுசன் என்னும் இளைஞன் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞன், கைதுசெய்யப்பட்ட மறுதினமே சுகவீனமுற்ற நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த இளைஞனின் மரணத்தில் உறவினர்களினால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, 4 பக்கட்டுக்களை கொண்ட ஐஸ் போதைப்பொருளை வாயில் போட்டு விழுங்கிய நிலையில் அது நெஞ்சுப் பகுதியில் போதைப் பொருள் வெடித்ததில் நுரையீரல் பாதிக்கப்பட்டு, உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் உண்மை நிலை கண்டறியப்படவேண்டும் என்று கோரி, பெற்றோரால் நீதிமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டட நிலையிலேயே, இளைஞனின் சடலம் மீண்டும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.



திருட்டு மோட்டார் சைக்கிள்களில்

## நகைகள் கொள்ளை; எண்மர் கைதாகினர்

■ ஜூட் சமந்த

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி, வீதியில் செல்லும் பெண்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளைக் கொள்ளையிட்டு வந்த 8 பேர், முந்தல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் முந்தல், மதுரங்குளி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 8 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு மோட்டார் சைக்கிள் பகுதிகளாக வேறாக்கப்பட்டு உரப்பையொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர்களால் கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், சந்தேகநபர்களை புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.



## 'குமுழமுனை மரமுந்திரிகை காணியை விடுவியுங்கள்'

■ நடராசா கிருஸ்ணகுமார்

1970ஆம் ஆண்டு வழங்கப்பட்டு மரமுந்திரிகைகள் நாட்டப்பட்ட முல்லைத்தீவு, குமுழமுனை காணியை விடுவித்துத் தருமாறு, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குமுழமுனை மேற்கின் கரடிப்பூவல் பகுதியில் 500 ஏக்கர் மர முந்திரிகை காணி இவ்வாறு விடுவிக்கப்படாமல் உள்ளது.

2010ஆம் ஆண்டில் இருந்து குறித்த காணியை விடுவிக்கும்படி காணியின் உரிமையாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர்,



கரைதுறைபற்று பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களம் என்பவற்றின் அதிகாரிகள் காணியைப் பார்வையிட்டு விரைவில் விடுவிப்பதாக வாக்குறுதிகள் வழங்கியிருந்தனர்.

எனினும், காணிக்கான ஆவணங்கள் மக்களிடம் உள்ள போதிலும் காணி விடுவிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

காணிக்குச் செல்கின்ற வீதியில் இராணுவ முகாம் இருப்பதன் காரணமாக இராணுவ முகாமைத் தாண்டி காணிக்குரியவர்கள் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே, இந்த மரமுந்திரகை காணியை விடுவிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, குமுழமுனை மேற்கு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தில்

## 18 கடைகளுக்கு சீல்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி நகரில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதான வீதி மற்றும் உள் வீதிகளில், பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், நகர சபை உத்தியோகத்தர்கள் இணைந்து திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, பயணக் கட்டுப்பாடுகளை மீறி, அனுமதியின்றி வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டன.



## 'தெங் செபத?' எனக் கேட்டவர் கைது


மொரட்டுவ மேயர் சமன்லால் பெர்ணான்டோவிடம் 'தெங் செபத?' (இப்போது சந்தோசமா?) எனக் கேட்ட நபரை, மொரட்டுமுல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொரட்டுவ பிரதேசத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்த வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மொரட்டுவ மேயர், பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய நபர் 'தெங் செபத?' என்று கேட்டு அவரை அச்சுறுத்தியுள்ளதாக மொரட்டுவ மேயர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மொரட்டுவ மேயருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிக்கப்படும் சந்தேகநபரின் தொலைபேசியை சோதனை செய்வதற்கான நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அவரைக் கைது செய்துள்ளனர்.

எவ்வாராயினும் கைது



செய்யப்பட்ட நபர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கும் மொரட்டுவ மேயருக்கும் இடையில் பிரச்சினைகள் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தீமையிலும் விளைந்த நன்மை





இளங்கோ பாரதி
ilangobharathy727@gmail.com

“எப்போதடா இந்தப் பாடசாலைகள் ஆரம்பமாகும்?” என்ற அங்கலாய்ப்பை இப்போதெல்லாம் அடிக்கடி கேட்கக் கூடியதாக உள்ளது. கொரோனா ஏற்படுத்திய நெருக்கடியால், நாட்டின் கல்விச் செயற்பாடுகள் முடக்கப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டன.

பெற்றோரும் பிள்ளைகளும் கல்விச் சமூகமும், கல்வி குறித்த ஏக்க நிலையை, உணர்வு பூர்வமாக அனுபவித்து வரும் நிலையில் , ‘யானைப் பசிக்குச் சோளப்பொரி ’ என்பது போல, இலத்திரனியல் ஊடாகத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் ‘நிகழ்நிலை’ கல்விச் செயற்பாடுகள், பல்வேறு தரப்பினரதும் பேசுபொருளாக மாறியுள்ளன.

ஒருபுறம், இக்கற்றல் நடவடிக்கைகளால் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள பெற்றோர், மறுபுறம், இதனால் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகியுள்ள மாணவர்கள், இன்னொருபுறம், இக்கற்றல் நடவடிக்கைகளின் பங்குதாரரான ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர் என, இவர்கள் அனைவரினதும் ஏகோபித்த எதிர்பார்ப்பானது பாடசாலைகள் ஆரம்பமாகும் நாளுக்கான காத்திருப்பே அன்றி வேறொன்றும் இல்லை.

‘நேரம் என்பது அருமையான ஒரு வளம்’. பெறுமதிமிக்க இவ்வளம், நாட்டில் ஏற்பட்டுள்ள முடக்க நிலைமைகளால் பெருமளவில் வீணாகிக்கொண்டிருக்கிறது. இந்நேரத்தைச் சரியான விதத்தில் முகாமை செய்ய, எம்மவர் பலர் இன்னும் பழக்கப்படவில்லை. அவ்வாறு முகாமை செய்வதற்கான உத்திகளைப் புத்திஜீவிகள் மேற்கொண்டாலும் கூட, அதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள பலர் முயற்சிப்பதில்லை.

**நேரத்தைச் சரியாக முகாமை செய்ய, எம்மவர் பலர் இன்னும் பழகவில்லை**

இவ்வாறானதொரு நிலையில், மாணவரது கற்றல் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்று நடவடிக்கைகளும் கூட, எதிர்பார்த்த பலனைத் தரமுடியாத ஒரு தேக்க நிலையை உருவாக்கியுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ‘நிகழ் நிலைக் கல்வி’ நடவடிக்கைகள் பற்றி, ஆசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் “மாணவர்கள் அனைவரையும் இக்கல்வி நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்வதில், பல தடைகள் காணப்படுகின்றன” என வருத்தம் தெரிவித்தார்.

“எமது நாட்டில் இலவசக் கல்வி ஆரம்பித்து, பல வருடங்கள் கடந்து விட்ட நிலையில், கல்வியில் சமவாய்ப்பு வழங்குவதில் அரசு முனைப்புடன் செயற்பட்ட போதிலும் தற்போது வழங்கப்படும் இலத்திரனியல் ஊடான கல்வி, வறிய மாணவர்களுக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது. நிகழ் நிலை வகுப்புகளில் பங்கேற்க, வீடுகளில் மின்சாரம் அவசியமாகின்றது. மாணவர்களிடம் திறன்பேசி இருத்தல் வேண்டும். அதற்கான இணைய வசதிகளும் வேண்டும். அன்றாடம் உணவுத்தேவையையே பூர்த்திசெய்ய முடியாத வறியோருக்கு, இணையவழிக்கல்வி எட்டாக்கனியே. இதனால் மாணவர்களின் பங்களிப்பை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. பாடவிதானத்தை உரிய காலத்தில் பூர்த்திசெய்ய முடியாத நிலை உள்ளது” என்று தெரிவித்தார்.

மேலும், இக்கற்றல் நடவடிக்கைகளில் சிக்கல் தன்மை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்றும் குறிப்பிட்டார். ஒரு வீட்டில், பல பிள்ளைகள் கல்வி பயிலும் நிலையில், திறன்பேசியை யார் பயன்படுத்துவது என்ற சிக்கல்நிலை தோன்றுவதாகவும் அவ்வேளைகளில் பொதுப் பரீட்சகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கல்வியில் சமவாய்ப்பு என்பது குடும்பத்திற்குள்ளேயே மறுக்கப்படுகிறது என்பதோடு அம்மாணவர் கல்வியிலிருந்து விலகிச் செல்லவும் அவை வழிவகுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர் சார்ந்து எழும் மற்றொரு பிரச்சினை, ஆசிரியர் - மாணவர் இடையிலான கண்வழித் தொடர்பு இல்லாததாகும். இதனால், கற்றல் செயற்பாட்டை மாணவர்கள் விளங்கிக் கொண்டனரா என்பதை ஆசிரியரால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை என்றார்.

தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவ முடிந்த பெற்றோர்க்கு, உளரீதியான நிறைவு ஏற்பட்டுள்ள போதிலும் முடக்க நிலையால் குடும்பத்தவரது உணவுத்தேவையையே பூர்த்திசெய்ய முடியாமல் அல்லலுறுவோருக்கு திறன்பேசிகளையோ, மடிக்கணினிகளையோ, ‘ ரப்’ வகைகளையோ கொள்வனவு செய்வதென்பது பெரும் சுமையாக மாறியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், வளர்முக நாடுகளில் மாத்திரமின்றி வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட இவ்வாறான பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளதாகவும், அதற்கு மாற்று நடவடிக்கைகளாக பாடசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில், வீடுகளில் பயன்படுத்தாதிருக்கும் மடிக்கணினிகள், ‘ ரப்’ வகைகள் கோரப்படுவதாகவும், இதற்குச் சமூகத்திலுள்ள நலன்விரும்பிகளின் உதவி பெறப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

“இலவசக்கல்வி வழங்கப்பட்டதனாலேயே எமது நாட்டில் சகலரும் கல்வி பெறும் நிலை உருவாகியது. இருந்தும் பாடசாலை புகுந்த அனைத்து மாணவர்களதும் பரீட்சைப் பெறுபேறுகள் ஒரேமாதிரியானதாக இருந்ததில்லை. மாணவர்களது தனியாள் வேறுபாடுகளால் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்பதி தரும் விதத்தில் அமைந்திருப்பதில்லை” எனவும் எடுத்துரைத்த அவர், “பாடசாலை செல்லாமல் வீட்டில் நிகழ்நிலை வகுப்புகளில் கற்கும் மாணவரது பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் இனிவரும் காலங்களில் சரிவுநிலைக்குச் செல்ல வாய்ப்புகள் அதிகம். இதற்குத் தீர்வாக பெற்றோரின் பங்களிப்புகள் முழுமையாகப் பெறப்பட வேண்டும். தத்தம் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைப் பெற்றோர் மேற்பார்வை செய்ய வேண்டும். இனங்கண்ட பிரச்சினைகள் தொடர்பாக, ஆசிரியர்களோடு கலந்துரையாடக்கூடிய பொறிமுறையொன்று ஏற்படுத்தப்படவேண்டும்” என்றும் விதந்துரைத்தார்.

இணைய வழிக் கல்வியைப் பெரும்பாலான மாணவர்கள் தம் வீடுகளிலிருந்தே பெற்றுக் கொள்வதால் கவனச் சிதைவுகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளமை, இதில் காணப்படும் மற்றொரு குறைபாடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இது மாணவர்களின் உடல்நிலையில் தலைவலி, கண் பாதிப்புகள், முதுகுவலி உள்ளிட்ட உபவிளைவுகளை ஏற்படுத்துகிறது. அத்துடன் எவ்விதமான உடல் இயக்கங்களும் இல்லாத சூழலும், சக மாணவர்களுடன் பேசுவது போன்ற சமூக உறவுகள் இல்லாத சூழலும் மாணவர்களின் மனநிலையை அதிகமாக பாதிக்கிறது.

மலையகத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மிகவும் பரிதாபத்துக்குரியவையாக காணப்படுகின்றன. அவர்களில் சிலர் கணினி, திறன்பேசி ஆகியவற்றுக்கு வலையமைப்பு வசதிகள் இன்மையால், இணையவழிமூலம் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் இம்மாணவர்கள் உடல், உள உபாதைகளுக்கு உள்ளாவது கண்கூடாகக் காணப்படும் ஓர் உண்மையாகும்.

நிகழ்நிலை வகுப்புகள் தொடர்பாக, உயர்வகுப்பு மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் “இன்றைய நிலையில், கல்வியைத் தொடர இவ்வகுப்புகளைத் தவிர, வேறு உபாயங்கள் இல்லை. இதனால் மாணவர் சமுதாயம் மாத்திரமன்றி, ஆசிரியர்கள், பெற்றோர்களும் கூட, உலகமயப்படுத்தப்பட்ட கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்கும் திறனை வளர்த்துக் கொண்டுள்ளதாகவும், இவ் அபிவிருத்தியானது காலத்தின் கட்டாய தேவையே” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஆர்வலர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், “மேலைநாடுகளில் நிகழ்நிலை வகுப்புகளில் கற்க மாணவர்கள் மடிக்கணினிகள், ‘ ரப்’ வகைகளைப் பயன்படுத்துகிறார்கள். நமது நாட்டில் திறன்பேசிகளைப் பயன்படுத்தியே பெரும்பாலான மாணவர்கள் கற்று வருகிறார்கள். இது ஒரு விதத்தில் மாணவர்களுக்குச் சிரமமானதே” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**பெற்றோர்கள் கல்விச் செயற்பாடுகளில் பங்குதாரராக இணையும் நிலை**

மேலும், பதின்மவயதினரான மாணவர்களது கரங்களில் உள்ள திறன் பேசிகள், அவர்களைத் தவறுதலான வழியில் இட்டுச் செல்லவும் வாய்ப்புகள் அதிகம் என்றும் பெற்றோர் தம் பிள்ளைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் இதற்குப் பெரிதாக கல்வியறிவு தேவையில்லை என்றும் பிள்ளைகளின் மீதான அக்கறை ஒன்றே போதும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரிந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், “பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், ‘குரு கெதர’ நிகழ்ச்சித் திட்டம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுதாபனத்தின் ஊடகப் பங்களிப்புடன் தமிழ், சிங்கள மொழிகளில் ஒளிபரப்பப்படுகிறது. மாணவர்கள் இதனால் பயன் பெற முடியும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான மாணவர்களது வீடுகளில், இணையம் மூலம் கற்றலுக்கான வசதிகள் இல்லாது விடினும் தொலைக்காட்சி வசதிகள் காணப்படுவதால் மாணவர்களுக்கு இது நன்மை பயக்கும் என்பது உறுதியாகும்.

எது எப்படியோ இன்று பெற்றோர்கள் கல்விச் செயற்பாடுகளில் பங்குதாரராக இணையும் நிலை உருவாகி விட்டது. இது அவர்களுக்குச் சுமையாக அமைந்தாலுங்கூட, ஆரோக்கியமானதொன்றே என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. தீமையிலும் கூட ஒரு நன்மை விளைந்து தான் இருக்கிறது; வரவேற்போம்!

காற்றில் கலையக்கூடாத

# ஓலங்கள்



ப. பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com



‘கலியுகத்தின் தாம்பத்தியம், வெறும் செயற்கையானதும் கவர்ச்சிக்காகதாகவும் மட்டுமே இருக்கும்; ஆண்மையும் பெண்மையும் காமச் செயல்களில், எவ்வளவு திறமையாக இருக்கின்றன என்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்படும்’ (ஸ்ரீமத் பாகவதம் 12.2.3)

கலியுகத்தின் இல்லற வாழ்க்கை, வெறும் புலன் இன்பத்துக்காக மட்டுமே இருக்கும் என்பதை, ஸ்ரீமத் பாகவதத்தில் மேற்குறிப்பிட்டபடி முன்மொழியப்பட்டுள்ளது. இன்று நாம் கேள்விப்படும் சில செய்திகள், இக்கூற்றைப் படம்பிடித்துக் காட்டுவது போலவேதான் இருக்கின்றன.

‘கொரோனா’ எனும் வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், ‘குடும்ப வன்முறை’ எனும் அசுர தாண்டவமும் தற்போது சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளது.

முடக்கம், பயணக் கட்டுப்பாடு என அதிகாரத்தில் உள்ளோர், கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றுக்குப் பின்னால் ஓடுகின்றனர். எனினும், இவற்றின் எதிர்வினையாக ஏற்படும் குடும்ப வன்முறைகளுக்குள் சிக்கி, பெண்களும் சிறுவர்களும் அல்லற்படுகின்றனர். இதற்குள் சில ஆண்களும் மாட்டிக்கொண்டு தவிக்கின்றனர்.

**‘நல்ல குடும்பங்களே, சமுதாயத்தின் ஆணிவேர்கள்’ குடும்பங்கள் சிதறும்போது, துன்பங்களும் அதிகரிக்கின்றன**

கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில், முடக்கம், பயணக் கட்டுப்பாடு ஆகியன அத்தியாவசியமாக உள்ளன. இதனால், அநேகர் வீடுகளுக்குளேயே முடங்கியுள்ளனர். இவர்களில் பலர், மன அழுத்தங்களுக்கும் உள்ளாகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில்தான், உலகளாவிய ரீதியில் குடும்ப வன்முறைகள், தற்போது அதிகரித்துச் செல்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. பல நாடுகளில் 10 முதல் 50 சதவீதம் அதிகரித்துள்ளன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

இலங்கையில், இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை, 1,200க்கும் மேற்பட்ட பெண்கள், 1938 க்கு அழைத்துள்ளனர். அவர்கள், தாம் வீடுகளில் அனுபவித்த உடல், பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்களில் இருந்து, தம்மை விடுவிக்குமாறு உதவி கோரியுள்ளனர்.



வீடுகளில் கூட்டாக இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், நாம் மேற்கொள்ளும் சில செயல்களும் பேச்சுகளுமே குடும்ப வன்முறைகளுக்கு வழிசமைக்கின்றன. இதன் விளைவாகவே, பொலிஸாருக்கும் பிற உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் வரும் முறைப்பாடுகளும் உதவி கோருதல்களும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன.

தற்போதுள்ள பயணக் கட்டுப்பாடுக் காலப்பகுதியில், வீடுகளுக்குள் இடம்பெறும் குடும்பத் தகராறு காரணமாக, 150க்கும் மேற்பட்டவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில், பெரும்பாலானவர்கள் ஆண்களாவர். அவர்களில் 112 பேர் குடும்பத் தலைவர்கள் என்றும், 42 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால், குடும்ப வன்முறைகள், துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர்களும் அதிகளவில் முகங்கொடுத்துள்ளனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிராமம் ஒன்றிலுள்ள தாயார், அருகிலுள்ள வீட்டுக்குச் சென்ற வேளை, 7 வயதுச் சிறுமி வீட்டில் தனித்திருந்த சந்தர்ப்பத்தில், அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட சம்பவமும் திங்கட்கிழமை (14) நடந்தேறியுள்ளது.

இதில் சந்தேகநபர்களாக 12, 14 வயதுடைய இருசிறுவர்கள், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிறுவர்கள் இருவரும், வீட்டுக்குள் புகுந்து சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர். சிறுமி, தனக்கு நேர்ந்த கதியை பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, பெற்றோர் வழங்கிய பொலிஸ் முறைப்பாட்டையடுத்து, மேற்படி இரு சிறுவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

அதேபோன்று, தாயிடமிருந்து வாங்கிவரப்பட்ட 15 வயது சிறுமியை, இணையத்தை பயன்படுத்தி பாலியல் நடவடிக்கைகளுக்கு, பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஆணொருவரும் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணக் கட்டுப்பாட்டு காலத்தின்போது, தேவையற்ற கர்ப்பத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, குடும்ப சுகாதார பணியகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. அண்மைய காலங்களில், இதுபோன்ற பின்னணியில் தேவையற்ற கர்ப்பங்கள் பதிவாகியுள்ளதாக, அந்தப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தேவையற்ற கர்ப்பத்தை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த ஆலோசனையை, சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது குடும்ப சுகாதார அதிகாரிகளிடம் பெற வேண்டும் என்று அப்பணியகத்தின் இயக்குநர் டொக்டர் சித்ரமாலி டி சில்வா கூறியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில், பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக, மாவட்ட சிறுவர், மகளிர் நன்னடத்தைப் பிரிவு, அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. இதற்கமைய, 2019, 2020ஆம் ஆண்டுகளில், இரத்தினபுரி மாவட்டத்தில் 15 பெண்களினதும் ஐந்து சிறுவர்களினதும் மரணங்கள் பதிவாகி உள்ளன.

‘நல்ல குடும்பங்களே, சமுதாயத்தின் ஆணிவேர்கள்’ என்பர். இந்தக் குடும்பங்கள் சிதறும்போது, குழப்பங்களும் துன்பங்களும் அதிகரிக்கின்றன. எனவே, கொரோனா ஒழிப்புக்காக வீடுகளில் ஒன்றுகூடியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அநாவசிய பிரச்சினைகளை வளர்க்காமல், பயனுள்ள வழிகளில் தமது நேரத்தைப் பயன்படுத்திகொள்ள வேண்டும்.

யோகாசனம், உடற்பயிற்சி, வீட்டுத் தோட்டம், வாசித்தல், துப்புரவுப் பணிகள், துறைசார்த்த அறிவை வளர்த்தல், ஆரோக்கிய உணவுகளை சமைத்தல், இசையைக் கேட்டல், நன்றாக ஓய்வெடுத்தல் என்பவற்றின் மூலம், மன அழுத்தங்களுக்கு உள்ளாகாமல் தப்பித்துக்கொள்ளலாம். இதனால் பல பிரச்சினைகளை விரட்டிவிடலாம். குறிப்பாக, வீட்டிலிருந்து வேலை செய்யும் தம்பதியினர், தமது குழந்தைகளைச் சிறப்பாகப் பராமரிக்கும் ‘சொர்க்க’ நேரமாக, இவற்றை மாற்றிக்கொள்ளலாம்.

‘1938’ எனும் அவசரத் தொலைபேசி இலக்கமானது, துன்புறுத்தல், துஷ்பிரயோகம், வன்முறை போன்றவற்றுக்கு உட்பட பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த முறைப்பாடுளைப் பெறும் பொருட்டு, மகளிர், சிறுவர் விவகார அமைச்சால் 2013ஆம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இச்சேவை 24 மணி நேரமும் கிடைக்கப்பெறுகின்றது.

மூன்று மொழிகளிலும் செவிமடுக்கப்படும் இந்த அவசரத் தொலைபேசி இலக்க சேவையானது, பெண்கள் வீட்டில், பணியிடத்தில், பஸ், ரயில் உட்பட, வேறு எந்தப் பொது இடத்திலும் துஷ்பிரயோகம், துன்புறுத்தல் போன்றவற்றுக்கு உள்ளானால், முறைப்பாடு வழங்கக் கூடிய வகையிலேயே செயற்படுத்தப்படுகின்றது.

இதற்கமைய, கொரோனா தொற்று ஆரம்பித்த 2020 ஜனவரி தொடக்கம் 2021 மே மாதம் வரை, 1938 அவசர அழைப்புக்கு, பெண்கள் மீதான 5,561 வன்முறைகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 1,119 குடும்பத் தகராறுகளும் 16 வன்புணர்வுச் சம்பவங்களும் 13 சிறுவர் துஷ்பிரயோகங்களும் 404 இணையவழிக் குற்றச்செயல்களும் உள்ளடங்குகின்றன.

எவ்வாறாயினும், வன்முறை அல்லது பாதிப்புக்குள்ளான பெண்கள், தற்போதைய கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, உதவி பெறும்போது, கூடுதலான தடைகளைச் சந்திக்க நேரிடுகின்றது. எனவே, நீங்களோ தெரிந்த ஒருவரோ வீட்டு வன்முறையை அனுபவிக்கிறீர்கள் என்றால், தயவுசெய்து இங்கு அறிவுறுத்தப்பட்டிருக்கும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுங்கள், அவற்றில், ஏதேனும் ஒன்று, உங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவளித்து உதவக்கூடும். இல்லாவிடின், அல்லற்படுபவர்களில் அபயக் குரல்கள், காற்றில் கலைந்துவிடும் வெறும் ஓலங்களாகவே இருக்கும்.




பெண்கள் உதவி தொலைபேசிச் சேவை
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு
1938

உதவி தேவைப்படும் பெண்களுக்கு
0775676555

பெண்களுக்கான சட்ட ரீதியான உதவிக்கு
0768686555

குழந்தை மற்றும் பெண்கள் பணியகம்
இலங்கை பொலிஸ்
0112444444

குழந்தைகள் பாதுகாப்பு படை
0114848856



# விதிப்படி நடக்கட்டும்

கடவுளுக்கும் சாதாரண பக்தனுக்கும் இடையில், தொடர்பாடலாளராக இருப்பவர்தான் சாமியார். ஆரம்பகாலங்களில் கடவுளாகவே பார்க்கப்பட்டனர். பிற்காலங்களில் வந்த சாமியார்கள் சிலரின் வேண்டத்தகாத செயற்பாடுகளால், சாமியாருக்கான மதிப்பு, மரியாதைகள் குறைந்துகொண்டே வந்தன; வருகின்றன.

கலப்படம் இல்லாத பொருள்கள் இல்லையென்றே கூறவேண்டும். அந்தளவுக்கு கலப்படங்கள் மலிந்துவிட்டன. சாமியார்களில் போலி சாமியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துகொண்டே செல்கின்றது. இந்தியாவில் மூலைமுடுக்கெல்லாம் சாமியார்கள் காட்சியளிப்பர்.

அவ்வாறான போலி சாமியார்களின் லீலைகளும் கட்டுக்கடங்காது சென்றுகொண்டிருக்கின்றன. அதன்வரிசையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றது. புதிதாக இணைந்தவர்தான் சிவசங்கர் பாபா. இவருக்கு முன்னர், மோசடி சாமியார்களின் வரிசையில் பிரேமானந்தா, நித்யானந்தா, ராம் ரஹீம் ஆகியோர் இடம்பிடித்துகொண்டனர்.

ஆன்மிகம், சொற்பொழிவு, வாய் ஜாலத்தை வைத்துக் கொண்டு எதையாவது பேசி மக்கள் கூட்டத்தை கூட்டி, சாமியார் என்ற போர்வையில் சிலர் அளவுக்கு அதிகமாக சொத்துகளை குவிப்பது, பாலியல் குற்றச்சாட்டுகளில் சிக்குவதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

அவ்வாறு பேசப்பட்ட சாமியார்களை இந்திய ஊடகமொன்று தொகுத்துள்ளது. அந்த வகையில், பேசப்பட்டவர்களான பிரேமானந்தா, நித்யானந்தா, ராம் ரஹீம், சிவசங்கர் பாபா. இந்த மோசடி சாமியார்கள் அரங்கேற்றிய லீலைகளை அந்த ஊடகம் விவரித்துள்ளது.

### இலங்கை

முதலில் பிரேமானந்தா- இலங்கை மாத்தளையைச் சேர்ந்த பிரேமானந்தா, வாயில் திருநீரு கொட்டுவது, சிவலிங்கம் எடுப்பது போன்ற சித்து விளையாட்டுகளை அதிகம் செய்து வந்தார். பிரேமானந்தா ஆசிரமத்தில் தங்கியிருந்த ஆதரவற்ற சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்கள் நடந்தது வெளிச்சத்துக்கு வந்தன.

ராம் ரஹீம், அது போல் நித்யானந்தாவும் பிடதியில் ஆசிரமத்தை வைத்துக் கொண்டு அங்குள்ள பெண் பக்தர்களிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபடுவதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து சிர்சாவில் உள்ள தேரா சச்சா ஆசிரமத்தில் பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அந்த அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் கைது செய்யப்பட்டார்.

### போர்வை

அந்த வரிசையில் தற்போது பள்ளியில் படித்து வந்த சிறுமிகளுக்கு பரிசு பொருட்களை கொடுத்து பாலியல் அத்துமீறல்களை நடத்தியதாக அதன் நிர்வாகி சிவசங்கர் பாபா மீது எழுந்த புகாரின்பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது போல் சாமியார்கள் என்ற போர்வையில் பாலியல் அத்துமீறல்கள் பெருகி வருவது வேதனைக்குரியதாக உள்ளது.

**“ ஆன்மிகம், சொற்பொழிவு, வாய் ஜாலத்தை வைத்துக் கொண்டு ஏதையாவது பேசி மக்கள் கூட்டத்தை கூட்டி, சாமியார் என்ற போர்வையில் அளவுக்கு அதிகமாக சொத்துகளை குவிக்கிறார்கள்**

### யாசகம்

அந்த காலத்தில் ரிஷிகள் யாசகம் கேட்டு தங்கள் வாழ்க்கையை கடத்தி வந்ததாக அவர்களின் வாழ்க்கை வரலாறு கூறுகின்றன. அவர்கள் வாழும் வரை எந்த சொகுசு வாழ்க்கையையும் வாழாதவர்கள். இது போன்ற மகான்கள், யோகிகள் , சித்தர்கள் பலதரப்பட்ட மதங்களில் வாழ்ந்து மக்களுக்கு நன்மை செய்துவிட்டு, இன்னும் மக்கள் மனங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் விளையாடும் சித்து விளையாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாகவும் மக்களின் அறிவை வளர்த்துக் கொள்வதாகவும் இருந்ததே தொழிய திருநீறு எடுப்பது, லிங்கம் எடுப்பது போன்ற தந்திரங்களை செய்யவில்லை.

ஆனால், மேலே குறிப்பிட்ட மோசடி சாமியார்களோ ஆசிரமம் நடத்துவது, பள்ளி நடத்துவது என பணம் கொழிக்கும் தொழில்களையே செய்து வந்தனர். இவர்கள் வழங்கும் ஆன்மிக சொற்பொழிவுகளைக் கேட்டால் மனம் லேசாவதாக இவரது பக்தர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் இவர்களை விட எத்தனையோ நல்ல கருத்துகளை பல துறவிகள் வழங்கியுள்ளனர்.

**நாம் பிறக்கும் போது தலையில் என்ன எழுதிவைத்துள்ளானோ அதுபடிதான் நடக்கும் என்பதை முதலில் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். விதிபடி நடக்கட்டும் என்ற போக்கில் போனால் மட்டுமே, மோசடி சாமியார்கள் முளைப்பது தடுக்கப்படும்**

### விபூதி

இதையெல்லாம் விடுத்து ‘சுவாமிகள்’ வாயில் இருந்து எடுக்கும் லிங்கத்திற்கும் விபூதிக்கும் ஆசைப்பட்டு அவர்களை பின்தொடர்ந்தால் பாலியல் குற்றங்கள் அதிகரிக்கத்தான் செய்யும். இது போன்ற சாதாரண நபர்களை நாமே வளர்த்துவிட்டுவிட்டு இன்று குய்யோ முய்யோ என அடித்துக் கொள்வதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது?

### மதி

விதியை மதியால் வெல்லலாம் என்றாலும் நாம் பிறக்கும் போது தலையில் என்ன எழுதிவைத்துள்ளானோ அதுபடிதான் நடக்கும் என்பதை முதலில் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதை யார் நினைத்தாலும் மாற்ற முடியாது. இனியாவது இது போன்ற சாமியார்களை புறந்தள்ளிவிட்டு, விதிபடி நடக்கட்டும் என்ற போக்கில் போனால் மட்டுமே இனி மோசடி சாமியார்கள் முளைப்பது தடுக்கப்படும்.



கார்ப்போர்ட் சவப்பெட்டிகள்

# தாங்குமா?



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

என்னதான் சொத்து,சுகம் என வாழ்ந்தாலும் இறுதியில் என்றாவது ஒருநாள்அனைத்தையும் இழந்து வெற்றுடலாய் இந்த மண்ணுக்கு விடைகொடுக்கத்தான் போகிறோம். ஆனால், அதற்கிடையில் எத்தனை ஆசைகள், எத்தனை கோபதாங்கள், எத்தனை பிணக்குகள். அதிலும் இன்றைய கொரோனா காலக்கட்டத்தில் ஏழை, பணக்காரன் என்ற எவ்வித வேறுபாடின்றி உயிர்கள் காவுகொள்ளப்படும் நிலையில், நாம் கோடியோடியாய் கொட்டி அழகுப் பார்த்து நிர்மாணிக்கும் நம் வீட்டில் கூட எமது சடலத்தை ஆசைக்குக்கு கூட வைத்திருக்க முடியாத நிலையில், அவசர அவசரமாக சுடச்சுட நாம் மண்ணுக்கு விதையாகின்றோம்.

ஆனால், உயிரிழப்பவர்களின் அடக்கமோ தகனமோ செய்யும் முறையோ அல்லது அவர்களது சடலத்தை வைத்திருக்கும் சவப்பெட்டியை வைத்தே அவர் ஏழையா, பணக்காரனா அல்லது மத்தியவர்க்கத்தினரா என எடைப்போடலாம். அதனை சவப்பெட்டிகளின் தரமும் விலைகளும் வேலைப்பாடுகளும் நிர்ணயம் செய்துவிடுகின்றன.

இந்தச் சவப்பெட்டிகள் இதுவரை மரப்பலகைகள் மூலமே செய்யப்பட்டு வந்தன. ஆனால், அண்மைய சில காலங்களாக உலக நாடுகள் ‘கார்ட்போட்’ சவப்பெட்டிகளை தயாரிப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றன. குறிப்பாக, பல வருடங்களுக்கு முன்பே இதன்பாவனை அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கி, தற்போது ஆசிய நாடுகளிலும் இந்தத் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எமது நாட்டிலும் தற்போது மெதுவாக ‘கார்ட்போட்’ சவப்பெட்டி தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அண்மையில், தெஹிவளை - கல்கிஸ்ஸ நகர சபையின் உறுப்பினரான பிரியந்த சஹபந்துவால் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பு மற்றும் ஆலோசனையின் கீழ் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், கொரோனாவால் உயிரிழந்த ஒருவரின் சடலமும் இக்கார்ட்போட் சவப்பெட்டியில் வைத்து மே மாதம் 25ஆம் திகதி முதலாவதாக அடக்கம் செய்யப்பட்டது.

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்படாத அதேவேளை, இதற்கான செலவுகளை உறவினர்களே செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவதுடன், இச்செலவு 30,000- 45,000 வரை செல்வதாகவும் இன்றைய பொருளாதார நிலையில், ஒருவேளை உண்ணுவதற்கே விழிபிதுங்கி நிற்கும் நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிப்பவர்கள் அத்தனை ஆயிரங்களைக் கொடுத்து சவப்பெட்டியை வாங்க எங்கே செல்வார்கள். இதற்கு மாற்றீடாகவும் மரத்தால் ஆன சவப்பெட்டிகளுக்காக மரங்கள் தறிக்கப்படுவதையும் வனங்கள் அழிக்கப்படுவதையும் தடுப்பதற்காகவும், மர சவப்பெட்டிகளை எரிக்கும் போது அதிக மின்செலவு, நேர விரயம், எரிவாயு விரயம், இதனால் வளியுடன் கலக்கும் காபன் என்பவற்றை இந்த கார்ட்போர்ட் சவப் பெட்டியால் முழுமையாக் குறைக்க முடியும் எனவும் கழிவாக அகற்றப்படும் கடதாசி, கார்ட்போட்களை மீள்சுழற்சி செய்து இது உருவாக்கப்படுவதால், சுற்றாடலுக்கும் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என தெஹிவளை- கல்கிஸ்ஸ நகர சபையின் உறுப்பினரான பிரியந்த சஹபந்து தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத காட்போர்ட் சவப்பெட்டியை நாம் வரவேற்கும் அதேவேளை, தொழின்முறை ரீதியாக மரப்பலகைகளால் சவப்பெட்டிகளை செய்து வருபவர்களின் நிலையையும் ஆரோய வேண்டாமல்லவா?

நாம் எல்லோரும், எவரும் உயிரிழக்க கூடாது என்றெ எண்ணுவோம். அதிலும் இந்த் கொரோனா நேரத்தில் முதலாவது உயிரிழப்பு இலங்கையில் பதிவானபோது அதிர்ச்சியடைந்தோம், ஆனால் அது பத்தாக அதிகரித்து, தற்போது நாளொன்றில் குறைந்தது 50 பேர் உயிரிழக்கும் நிலையை வந்தடைந்தள்ளது. உண்மையில், ஒவ்வோர் உயிரும் பெறுமதியானது.

எவராவது உயிரிழந்தால் தான், தமது கைக்கு வருமானம் கிடைக்கும் மற்றொரு தரப்பும் எம்மத்தியில் இருக்கிறார்கள். அதில் முதலாவதாக சவப்பெட்டி செய்பவர்கள்; இரண்டாவதாக மலர்ச்சாலை உரிமையாளர்கள்; மூன்றாவதாக மலர்வளையங்கள் உள்ளிட்டவைகளை தயாரிப்பவர்கள். இறுதியில் மயானங்களில் சடலங்களை எரிக்கும், புதைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள்.

ஆனால், இன்று இவர்களுள் சவப்பெட்டிகளை தயாரிப்பவர்களின் தொழிலுக்கே ஆப்பாக இந்த கார்ட்போர்ட் சவப்பெட்டிகளின் வரவு அமைந்துவிடுமென தொழின்முறை சவப்பெட்டி தயாரிப்பாளர்களின் கவலையும் நியாயமானதே.

இந்த முறை தொடர்ந்தால் தமது தொழில் முற்றாக அழிவடைந்து விடும் என தொழின்முறை சவப்பெட்டி தயாரிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

“6,500 ரூபாய்க்கு காட்போர்ட் சவப்பெட்டி விநியோகிப்பதாக கூறுகிறார்கள். இந்த நிலை நீடித்தால் தொழின்முறை ரீதியாக சவப்பெட்டிகளை தயாரிக்கும் எம்போன்ற எத்தனையோ பேரின் நிலை மிகவும் மோசமடையும். நாம் எவ்வாறு வாழ்வது? இதற்கு தொழின்முறை சவப்பெட்டிகளைத் தயாரிக்கும் அனைவருக்கும் எதிர்ப்பை தெரிவிக்க முன் வரவேண்டும்” என்றார்.

**“ நாட்டில் கொரோனா தொற்றையடுத்து சவப்பெட்டிகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், கார்ட்போட் சவப்பெட்டிகளின் வரவு நிலைத்து நிற்குமா அல்லது தொழின்முறை சவப்பெட்டி உற்பத்தியாளர்களின் பிழைப்பில் மண் விழுமா என பொறுத்திருந்து பார்ப்போம்**

அவ்வாறு கார்போட் சவப்பெட்டிகளை அரசாங்கம் ஊக்குவித்தால், சாதாரண காரணங்களை அடிப்படையாக வைத்து, நிவாரண உதவிகளையாவது வழங்க முன்வரவேண்டும். சிறு வியாபாரிகளை பாதுகாக்க முன்வரவேண்டும் என்றார்.

“பாரியளவில் இந்த வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் உள்ளனர். அவர்களின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே கார்போட் சவப்பெட்டி முறை 100 சதவீதம் வெற்றியளிக்காது என நம்புகிறோம்” என்றார்.

“நாம் சிறிதளவு இலாபத்திலேயே அப்பெட்டிகைளை தயாரித்து விநியோகித்தாலும் மலர்ச்சாலைகளிலேயே அதிக பணம் அறவிடப்படுகின்றது எனத் தெரிவித்த அவர், சாதாரண மக்கள் இதனை விரும்பினாலும் உயர் வகுப்பினர் கார்ட்போட் பெட்டியை விரும்பமாட்டார்கள்.

எனவே, நாட்டில் கொரோனா தொற்றையடுத்து சவப்பெட்டிகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், கார்ட்போட் சவப்பெட்டிகளின் வரவு நிலைத்து நிற்குமா அல்லது தொழின்முறை சவப்பெட்டி உற்பத்தியாளர்களின் பிழைப்பில் மண் விழுமா என பொறுத்திருந்து பார்ப்போம்.





# தன்னை வாழவைத்து, பிறரையும் வாழவைக்கும் 'நிதானம்' வேண்டும்

தமக்குத் துன்பம் ஏற்படும்போது உணர்ச்சி வசப்படாமலும், கோபம் கொள்ளாமலும் இருக்கும் மனநிலையையே 'பொறுமை' என்பர். அப்பொறுமையுடன் நீண்ட காலம் காத்திருந்தால், பெரிய நன்மைகளை அடையலாம். பொறுமையை இழந்தவர்கள், பாரிய சிக்கல்களுக்குள் தானாகவே சென்று விழுந்துவிடுவர்.

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட மே 21ஆம் திகதி முதல், ஜூன் 21ஆம் திகதி வரையிலுமான 31 நாள்களும் பலரும் கடும் கட்டுப்பாடுகளுடன் இருந்துள்ளனர். கட்டுபாடுகளை மீறியவர்கள் 'கம்பி' எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆகையால், கட்டுப்பாட்டு விதிமுறைகளைக் கடைப்பிடியுங்கள்.

சிலருக்கு எதற்கெடுத்தாலும் கோபம் வரும்; ஓரிடத்தில் ஒருசில மணிநேரம்கூட இருக்கமாட்டார்கள்; மற்றவர்கள் தம்மை இகழ்ந்தால், தாமதமாகினால், பிரச்சினைகள் வந்தால், துன்பங்கள் வந்தால், கொதித்தெழுந்து பொறுமையை இழந்துவிடுவர். அதனால் அழிவுகளையே சந்திக்கவேண்டிவரும்

அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து, சமாளித்து, அமைதியாக இருப்பவர்களே பொறுமைசாலிகள். அந்தக் குணம் இருப்பவர்கள் உடல், உள நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். இங்கு, பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் வீடுகளிலிருந்து வெளியே தலையைக் காட்டாது பொறுமையாக இருப்பதன் ஊடாக, நீண்டநாள் பயன்களை அனுபவிக்கலாம்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர், 'எருமை மாடுகளைப் போல' கட்டுக்கடங்காது சென்றோமெனில், சிறிய நன்மைகளை மட்டுமே அடையமுடியும். அத்துடன், கொரோனாவின் தாக்கமும் அதிகரித்துவிடும். ஆக, 31 நாள்களும் பொறுமையாக இருந்த நீங்கள், எடுத்த எடுப்பிலேயே வீடுகளைவிட்டு வெளியேறாது, பொறுமையைக் கடைப்பிடிங்கள்; பேரின்பம் கிடைக்கும்.

சகல வகையான தானங்களுமே பிறரை வாழவைக்கும். ஆனால், நிதானம் மட்டுமே தன்னை வாழவைத்து, பிறரையும் வாழவைக்கும். இக்காலப்பகுதியிலும் கொரோனாவை தொற்றிக்கொள்ளாதும், மற்றவர்களுக்கு கொரோனாவை தொற்றி விட்டுவிடாமலும் இருப்பதற்கு நிதானம் முக்கியமானது.

"பொறுமை என்பது, துரதிர்ஷ்டங்கள் அல்லது துன்பங்களால் உருவாகும் வலுவான உணர்ச்சிகளைக் கடக்க, தனிநபரை அனுமதிக்கும் ஒன்றாகும்" என தத்துவஞானியும் விஞ்ஞானியுமான அரிஸ்டாட்டில் கூறியிருக்கின்றார்.

அந்தப் பொறுமையை இன்னும் சில நாள்களுக்கு முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். பயணக்கட்டுப்பாடுகள் மட்டுமே அமல்படுத்தப்பட்டமையை இட்டு சகலரும் சந்தோஷமடைய வேண்டும்.

ஒருவரேனும் வேலைக்குச் சென்று, அன்றைய நாள் பொழுதைக் கழிப்பதற்குத் தேவையான வருமானத்தைத் தேடிவருகின்றார். இதேவேளை, ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டிருந்தால், நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கும்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டன என்பதை மட்டுமே மனத்தில் கொண்டு பொருள்களின் விலைகளை கட்டுக்கடங்காமல் ஏற்றிவிடுவதற்கு பெருமுதலைகள் முயற்சிக்கக்கூடாது. இது வருமானமின்றித் துவண்டிருக்கும் மக்கள் மீது மேலும் சுமையைச் சுமத்துவதற்கு ஈடானதாகும்.

இத்தனை நாள்களாக வர்த்தம் இடம்பெறவில்லை. ஏற்கெனவே வாங்கிய கடன்களைச் செலுத்தவேண்டும்; கொடுத்த கடன்களை வசூலிக்கவேண்டும். இவற்றுக்கெல்லாம் மாற்றுக் கருத்தே இல்லை. ஆனால், 'நிதானம்' முக்கியம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# கொய்யப்படும் மாகாண அதிகாரங்கள்



இல. அதிரன்

மனம் உண்டானால் இடமுண்டு. ஆனால் இலங்கையில் அந்த வார்த்தைக்குரிய அர்த்தம் யாருக்கும் தெரியாது என்பதே உண்மையாகிக் கொண்டிருக்கிறது. கேட்பதும் கிடைப்பதும் தேவையுள்ளவனுக்காக இருந்தால் அது சரியானதாக இருக்கும்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல்கொண்டு உருவான தமிழர்களின் உரிமைக்கோசம் ஆயுதப் போராட்டமாக வடிவம் பெற்ற நிலையில், மாகாண சபை ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது சிங்களவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. இப்போது அதிகாரப் பறிப்புகள் நடைபெறுகின்றன.

இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து நவம்பர் 14 இல் நாடாளுமன்றத்தின் ஊடாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அறிவிக்கப்பட்டு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அதன் தொடர்ச்சியாக 1988 ஆம் ஆண்டு பெப்ரவரியில் 9 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

வரலாறுகள், நடைபெற்றவைகள் தொடர்ந்தும் சொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆனால் பயன் எதுவுமில்லை என்று தெரிந்தாலும் மீண்டும் மீண்டும் ஒப்புவிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்த மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொள்ளவில்லை. 1988 செப்டெம்பர் 2 இல் வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. இந்த இணைந்த மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் நடத்தப்பட்டது. இந்தியாவின் ஆதரவில் இயங்கிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இத்தேர்தலில் வெற்றி பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தேர்தலில் பங்கேற்கவில்லை. அ. வரதராஜப்பெருமாள் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராகப் பதவியேற்றிருந்தார்.

இந்திய இலங்கை உடன்படிக்கையை அடுத்து இந்திய இராணுவம் அமைதி காக்கும் படையாக நாட்டுக்கு வந்தது. அதன் பின்னர், 1990 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையை விட்டுப் புறப்படும் தறுவாயில் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மாகாண சபையைக் கலைத்து தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு நாட்டை விட்டு வெளியேறி, இந்தியாவில் தஞ்சமடைந்தார். அப்போது ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாஸ இருந்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான பொது வாக்கெடுப்பு இடம்பெறாத நிலையில் தற்காலிக இணைப்பு ஒவ்வோர் ஆண்டும் நீடிக்கப்பட்டு வந்தது. இந்த இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், 2006 ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியே மாகாண சபையை நிறுவ வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இதனையடுத்து வடக்கு - கிழக்கு மாகாண சபையைப் பிரித்து அந்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. கிழக்கு மாகாண சபை கொழும்பின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு 2008 ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி முதலாவது தேர்தல் நடத்தப்பட்டது.

ஒன்றுக்குள் இருக்கும் மற்றொன்றுதான் இலங்கையின் அதிகார நிருவாகப் பரப்பு. நாம் எதனைத் தொட்டாலும் அதற்கு ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்யும். அரசியல் ரீதியாகக் காணப்படும் இந்த பெரும் இடைவெளியைச் சீர் செய்துகொள்வதில் விட்டுக் கொடுப்புக்களும் பரஸ்பர நம்பிக்கையும் கட்டாயமானது.

நாம் யாரும் அரசியல் தேவையில்லை என்று ஒதுங்கியிருக்க முடியாதளவுக்கு சமூக, பொருளாதார, கல்வி, கைத்தொழில், சுகாதாரம் என எல்லாவற்றிலுமே அரசியல் இறுகப் பின்னிப்பிணைந்துள்ள நிலையில் இப்போது இருக்கின்ற கொவிட் - 19, நடைபெற்று வருகின்ற கண்மூடித்தனமான சுவீகரிப்புகள் இப்போது தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் பெரும் அச்சத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மாகாண ஆட்சி முறையானது அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளின் நிறைவேற்றத்தின் மீதான பிரதிபலனுக்கானதாகவே எண்ணப்பட்டது. அதனை ஒரு தொடக்கப்புள்ளியாகவே கொள்ளமுடியும் என குறிப்பிட்ட தரப்பினர் கூறினர்.

இருந்தாலும் அதனை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை. பின்னர் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் வந்த ஒஸ்லோ உடன்படிக்கையையும் அவர்கள் ஏற்கவில்லை. ஆனால் 2009 மே மாதத்தின் பின்னர் என்ன செய்வது இருப்பதையேனும் கைக்கொள்வோம் என்ற நிலைக்கே தமிழர்கள் வந்தார்கள்.

இலங்கை மாகாண அமைப்பு முறையின் கீழ் அமையப்பெற்ற வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகளின் திட்டமிடல் வழிகாட்டலின் ஊடாக கடந்த 25 வருடங்களுக்கு மேலாக நிர்வாகக் கட்டமைப்புடனும் நிதி முகாமைத்துவத்துடனும் இயங்கி வருகின்றன. ஆனால் வடக்கு கிழக்கு அதற்கு நேர்மாறாக இருந்தது. 13 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்ட நோக்கம் முழுமை பெறவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

மத்திய அரசாங்கத்தின் உத்தரவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுநர் வடக்கு, கிழக்கு நிர்வாகங்களை மத்திய அரசாங்கத்துக்குச் சார்பாகவும் வெளிநாடுகளிலிருந்து பெறுகின்ற நிதியைச் சரியாகச் செயற்படுத்துகின்றோம் என்று வெளி உலகுக்குக் காட்டிக் கொள்வதற்கான போலிப் பிரசாரத்தை மேற்கொண்டும் சில உயர் அதிகாரிகளுக்குப் பதவி ஆசை காட்டியும் தமக்குச் சார்பான செயற்பாட்டில் ஈடுபடவைத்ததும் வரலாறு.

13 வது திருத்தச் சட்டம் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக அமலாக்குவதற்கோ மாகாண அமைப்பு முறை தொடர்பான மேலதிக உரிமைகளைப் வழங்குவதற்கோ எந்த முயற்சிகளையும் வடக்கு, கிழக்கு ஆளுநர் மேற்கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் இப்போது இரண்டு ஆளுநர்களும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் அரசாங்கத்தின் செயற்திட்ட நடவடிக்கையாளர்களாகவே இருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில்தான் இப்போது மாகாண சபைகளின் அதிகாரங்களுக்குள் இருக்கின்ற வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வருகின்ற கைங்கரியம் நடைபெறுகிறது. கொவிட் நிலைமைகளால் நாடு முடங்கியிருக்கிறது. சரியான இயக்கமில்லை. ஆனால் மத்திய அரசின் கைங்கரியயங்கள் உள் நோக்கங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

ஏற்கெனவே மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய காணி, பொலிஸ் அதிகாரங்களை சரியாக வழங்காது இழுத்தடிப்புச் செய்துகொண்டிருந்த நிலையில் மாகாண சபைகள் கலைக்கப்பட்டிருக்கின்ற சூழலில் வளங்களைப் பிடுங்கிக் கொள்வது சட்டவிரோதம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இருந்தாலும் மலையைப் பார்த்து நாய் குரைப்பதால் பலன் ஏதுமில்லை என்ற நிலைமையே தமிழர் தரப்புக்கு.

அதிகாரப்பரவலாக்கத்துக்கான குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யவதோடு தேவையான உரிமைகளைப் பெறுவதற்கு மத்திய அரசுடன் பேரம் பேச முடியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இப்போதும் காணப்படுகிறது. இருந்தாலும் அதற்கான வாய்ப்பைக்கூட சரியாக வழங்குவதற்கு அரசு தயாரில்லை.

கடந்த நல்லாட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான முயற்சியும் அதன் தொடர்ச்சியே. இப்போதும் கூட ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துடன் பேசி எதையாவது பெற்றுக் கொள்வோம் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு. அதுகூட கைகூடுவதாக இல்லை. இருக்கின்ற ஒன்றிலும் அதிகாரங்கள் கொய்து எடுக்கப்படுகின்றன.

மாகாணங்களின் அதிகாரங்களில் முக்கியமானவை. கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம் போன்றவைகள்தான். திவிநெகும ஊடாக விவசாயமும் தேசியப்பாடசாலைகள் என்ற திட்டத்தின் ஊடாக கல்வித்துறையும் பறிக்கப்பட்டு, இப்போது வைத்தியசாலைகள் ஊடாக சுகாதாரத்துறையும் கொய்யப்படுகிறது.

இது மத்திய அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகவே கொள்ளமுடியும். வளங்கள் இல்லை என்பதனைக் காரணம் காட்டி மாகாணத்தின் அதிகாரங்களை பறிப்பது எவ்வகையில் நியாயமானதாக இருக்கும் என்பதுதான் இப்போது தமிழர் தரப்புக் கேள்வி.

தேவைகளை நிறைவேற்றி வளங்களைக் கொடுப்பதற்கு சுவீகரிப்பு போன்ற நடைமுறை தேவையில்லை. கொடுப்தைக் கொடுக்கலாம் அல்லவா; பறிக்கவா வேண்டும் என்ற நியாயம் மத்திய அரசுக்கு புரியவேண்டும் என்று தமிழ்த் தரப்பு சொல்கிறது.

மக்களதும் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளதும் தூர நோக்கற்ற செயற்பாடுகளால் உருவாகிவரும் இவ்வாறான சூழல், தமிழர்களின் அரசியல் பலம் மற்றும் அதிகாரத்தில் ஒன்றுமில்லா நிலையையே உருவாக்கும். அத்துடன் இந்த அரசாங்கத்தின் மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்யும் தூர நோக்குக்கு முழு உதவி செய்துவிட்டதாகவே அமையும்.

70 வருடங்களைத் தாண்டியும் உள்நாட்டுக்குள் தீர்வைக் காணமுடியாதிருக்கின்ற ஒன்றை, தீர்த்துவைக்க இனியேனும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வழியைத் தேடுமா?



## வாழ்வியல் தரிசனம்

வீதி ஓரத்தில் எந்த விதமான வேலையும் இல்லாத ஒருநபர், அங்கு போய்வரும் சனங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

அப்போது, இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, "உங்களுக்குத் தெரியுமா? எங்கள் ஊர் இளைஞர்கள் சந்தியில் பெரிதாக அடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்.

வதந்திகளைப் பரப்புவர்களுக்கு இவை எல்லாமே சர்வ சாதாரணம். பொழுது போக்காகவும் கெட்ட எண்ணத்துடனும் இயங்கும் பலர், நல்லதை ஒருபோதும் நினைப்பதும் இல்லை.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இந்திராபுரம் ஊடாக மணல் டிப்பர்கள்

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளியின் இந்திராபுரம் கிராமத்தின் வழியாக மணல் டிப்பர்கள் செல்வதாகப் பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நேர்மையான வழியில் டிப்பர்களில் மணல் கொண்டு செல்பவர்கள், ஏ-9 சாலையின் ஊடாகப் பயணிக்கின்ற போது, களவாக மணல் கொண்டு செல்பவர்கள், இந்திராபுரம் கிராமத்தின் வழியை நீண்ட காலமாக பயன்படுத்தி வருவதாகவும் குறித்த வீதி தொடர்பாக பொலிஸாருக்குத் தெரிந்த போதிலும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டுகள் பொது மக்களால் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் வெளிப்படையாக பச்சிலைப்பள்ளியில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், இந்திராபுரம் வழியாக மணல் டிப்பர்கள் களவாக பயணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பச்சிலைப்பள்ளியில் மணல் கடத்தல்களை, பொலிசார் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

–நடராசா கிருஸ்ணகுமார்



## இரசாயன உரப் பாவனைத் தடை:

# முடிவு மாறுமா?



ச. சேகர்
business@tamilmirror.lk

இரசாயன உரப்பாவனைக்கு விதிக்கப்பட்டு இருக்கும் தடை தொடர்பில், எழக்கூடிய நீண்ட கால மற்றும் குறுங்கால பாதிப்புகள் குறித்து, நிபுணர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளை வெளியிட்ட வண்ணமுள்ளனர், ஆனாலும், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்ட அரசாங்கமும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும், தாம் மேற்கொண்ட தீர்மானத்தில் உறுதியாக இருக்கிறார்கள். அதேவேளை, இந்தத் தீர்மானத்தால் விளையக்கூடிய இழப்புகள், பாதிப்புகள் குறித்து, அக்கறை அற்றவர்களாக உள்ளனர்.

இந்நிலையில், 30 விஞ்ஞானிகளும் துறைசார் வல்லுநர்களும், இந்தச் செயற்கை உரப் பாவனைக்கான தடைத் தீர்மானத்தால் எழக்கூடிய பாதிப்புகளைக் குறிப்பிட்டு, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதில், இரசாயன உரப் பயன்பாடு நிறுத்தப்படுமானால், அதன் தாக்கம் ஒவ்வொரு பயிர்ச் செய்கையிலும் விளைச்சலிலும் எவ்வாறு அமைந்திருக்கும் என்பது பற்றிய விளக்கத்தை குறிப்பிட்டிருந்தனர். படிப்படியான இரசாயன உரப் பாவனையை நிறுத்துமாறு, அவர்கள் பரிந்துரைத்துள்ளனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில், எவ்வாறான முறையில் இந்த மாற்றத்தை எதிர்கொண்டிருந்தார்கள் என்பது அவதானிக்கப்பட வேண்டியுள்ளது.

நாடு தற்போது, கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலுக்கு முகங்கொடுத்துள்ளது, மிகவும் வேகமாகப் பரவும், அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 'டெல்டா' வகைத் தொற்று, சமூகத்திலிருந்து இனங்காணப்பட்டுள்ளது.

இந்நிலையில், உணவுப் பஞ்சமும் ஏற்படுமாயின், அது பொது மக்களைப் பெரிதும் பாதித்துவிடும். குறிப்பாக, 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் அனர்த்தத்தைத் தொடர்ந்து, நாட்டில் கடல் உணவுகளை உட்கொள்வதில், மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் காணப்படுகின்றது. பெருமளவானோர் கடல் உணவுகளைத் தவிர்த்து வருவதை மீன் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் நான்கு முதல் ஐந்து பேர் வரை, மிதி வண்டிகளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் மீன் விற்பனையில் ஈடுபடும் நிலையில், தற்போது ஒருவரைக் காண்பதும் அரிதாக உள்ளது. இந்நிலையில், மக்கள் தாவர உணவுகளில் அதிகளவு தங்கியுள்ளனர். குறிப்பாக, மலைநாட்டு மரக்கறி வகைகள், அதிகளவு நுகரப்படுகின்றன. இந்நிலையில், இந்த இரசாயன உரப்பாவனைத் தடையினூடாக, மலைநாட்டு மரக்கறிகளின் விளைச்சல், 30 – 50 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் என, ஜனாதிபதிக்கு விஞ்ஞானிகள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் பிரதான ஏற்றுமதி வருவாயீட்டும் துறைகளில், தேயிலை உற்பத்தி அடங்குகின்றது. தேயிலை உற்பத்திக்கு, இரசாயன உரப்பாவனை அத்தியாவசியமானதாக அமைந்திருப்பதாக, தேயிலை துறைசார் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். விஞ்ஞானிகள், ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில், இரசாயன உரப் பாவனை நிறுத்தப்படுவதால்,



தேயிலை விளைச்சல் 50% வரை பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளனர். அந்நியச் செலாவணிக்காகப் போராடும் நாட்டின் பொருளாதாரம், தேயிலைத் துறை உற்பத்தி பாதிப்பால் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்து எழும் இழப்புகளை ஜீரணித்துக் கொள்ள முடியாது.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக, பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிப்பு, இதர விநியோகப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், எரிவாயு, பால்மா விலை அதிகரிப்புக்கு அனுமதி கோரி, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விலை அதிகரிப்புக்காக காத்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, இவை பேரிடியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை.

அரசாங்கம், இந்த விடயங்கள் தொடர்பில் மீளச் சிந்திக்குமா? கடந்த காலங்களில், மக்களின் எதிர்ப்பின் நிமித்தம், பல தீர்மானங்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு அண்மைய சிறந்த உதாரணம், ஒன்லைனில் மதுபானங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தீர்மானத்தைக் குறிப்பிடலாம்.

தற்போதைய சூழலில், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பது, போதியளவு சேதன உரம் இறக்குமதி செய்யப்பட்டு கையிருப்பிலுள்ளது. உர இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. சேதன நெல் விளைச்சலை உயர் விலையில் அரசு கொள்வனவு செய்யும் என்பதாக அமைந்துள்ளது.

எவ்வாறாயிலும், இந்தத் தீர்மானங்கள், முயற்சிகள் அனைத்திலும் பின்னடைவுகளையே காண முடிகின்றது. உதாரணமாக, உரத்துக்கு நிலவும் கேள்வி, தற்போது இறக்குமதியினூடாக நிவர்த்தி செய்யப்படுகின்றது. உர விலைகள் பெருமளவில் அதிகரிக்கும் எனக் கருதி, சந்தையில் தட்டுப்பாடு நிலவுவது போன்றதொரு தோரணை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுப் பரவலுடனான கட்டுப்பாடுகள், இதர வளங்களில் எழுந்துள்ள சவால்கள் காரணமாக, தேவையான கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு சேதன உரப் பாவனை உயர்த்தப்படுவது என்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

உயர்ந்த விலையில் சேதன நெல்லைக் கொள்வனவு செய்யும் எனும் அரசாங்கத்தின் தீர்மானத்தால், உயர் உற்பத்தி விலை என்பதால், உயர் சந்தை விலை என்பதை அரசு கவனத்தில் கொள்ளவில்லை. சந்தையில் ஏற்கெனவே, அரிசியின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் சம்பா அரிசி ஒரு கிலோ கிராமின் சராசரி விலை ரூ. 120 ஆக காணப்பட்ட நிலையில், தற்போது ரூ. 155 முதல் ரூ. 160 வரை விற்கப்படுகின்றது. ஏப்ரல் மாத பண வீக்கம் 3.9% ஆகக் குறைந்திருந்தது. மார்ச் மாதத்தில் 4.1% ஆக காணப்பட்டது. உணவுகள் மீதான பண வீக்கம் 9% ஆகப் பதிவாகியிருந்தது. இது அந்தப் பெறுமதியில் சுமார் மூன்று மடங்காகும்.

இரசாயன உர பாவனையை, குறுகிய காலப்பகுதியில் பெருமளவு குறைப்பதால், விளைச்சல் பெருமளவு பாதிக்கும்; தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, விலை அதிகரிப்புக்கு காரணமாக அமையும் என பல நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான விவசாயிகளை கடன் நிலைக்குத் தள்ளி, கிராமிய பொருளாதாரங்களை மோசமடையச் செய்யும். இலங்கை விவசாயத்துறை, ஏற்கெனவே உற்பத்தித்திறன் குறைந்தாகக் காணப்படுவதுடன், மொத்தத் தேசிய உற்பத்தியில் 7% பங்களிப்பை மாத்திரமே வழங்குவதுடன், மொத்தப் பணியாளர்களில் 27% ஐ தன்வசம் கொண்டுள்ளது.

அரசாங்கத்துக்கு வாக்களித்த சமூகத்தில், பிரதான அங்கமாக விவசாய சமூகமும் அடங்குகின்றது. எனவே, இந்தப் பிரச்சினை தொடர்பில், நீண்ட கால அடிப்படையில், தீர்வு வழங்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி கோட்டாபயவின் நிர்வாகத்தில், பிரதான கொள்கைகளில் ஒன்றாக, சேதனச் செய்கைக்கு மாற்றம் பெறுவது, அடங்கியிருந்தாலும், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றத் தேர்ந்தெடுத்த நாட்டின் சூழல், சரியானதா என்பதை அரசாங்கமும் ஜனாதிபதியும் மீளச் சிந்திக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம், தோல்வியை தழுவிய, தவறான தீர்மானமாக அமைந்துவிடாமல், பலனளிக்கும் வெற்றிகரமான முடிவாக, நீண்ட கால அடிப்படையில் படிப்படியாக மேற்கொள்ளவது சிறந்தது. அரசாங்கத்தால், அண்மைக் காலங்களில் பல தீர்மானங்களுக்கு 'U' திருப்பம் அடித்தது போல, இரசாயன உரம் தொடர்பிலும் ஒரு 'U' திருப்பம் வருமா?

# ஆபத்தான பூஞ்சை




றம்ஸி குத்தூஸ்
ramsykuddoos@gmail.com

உலகம் இன்று கொரோனா வைரஸ் தாக்கத்தின் கெடுபிடியால் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. தற்போது மக்களின் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை இது ஏற்படுத்தியுள்ளது.

இந்தவேளையில், இந்தியாவில், கறுப்புப் பூஞ்சை, வெள்ளைப்பூஞ்சை, சிகப்புப் பூஞ்சை, பச்சைப் பூஞ்சை என்று தொடர்ச்சியாக 'பங்கசு' கள் வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அண்மையில் கூட இலங்கையின் அம்பாறைப் பகுதியில், இந்த பூஞ்சை நோய் கண்டுபிடிக்கப்பட்டு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர், வைத்தியதுறையினரிடம் 'கறும்பு பூஞ்சை' நோய்பற்றி கேட்டபோது, "கறுப்பு பூஞ்சை, பாரிய நோயல்ல; இந்த நோய் சிறியளவில் இலங்கையில் காணப்படுகிறது. தோலில் ஏற்படும் தேமல் ,பொடுகு,சொடுகு இவற்றையும் 'பங்கஸ்' என்று தான் அழைக்கிறோம். இந்தியாவில் காணப்படும் பூஞ்சைநோய்கள், குறிப்பாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால், இந்த பங்கஸ், சிலநேரம் நோயாளர்களுக்கு சுவாசப்பையூடாக சென்றால், அது பாரிய தாக்கத்தை, அதாவது, மரணத்தைக்கூட ஏற்படுத்தும் வாய்ப்புகளும் உண்டு" என்றும் தெரிவித்தார்.

முதலில், மியூகோர்மைகோசிஸ் (Mucormycosis) எனப்படும் கருப்பு பூஞ்சை தொற்று கண்டறியப்பட்டது. இது மிகவும் அரிதான நோய். அதே நேரத்தில் மிகவும் ஆபத்தானது. மூக்கு, கண், சில நேரங்களில் மூளை ஆகியவற்றை இது பாதிக்கும். இதுவரை இந்தியாவில் 12,000 பேர் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 200 பேர் இறந்து விட்டதாகவும் புள்ளி விவரங்கள்





தெரிவிக்கின்றன.

மேலும்,இவைபற்றித் தெரியவருவதாவது, கேன்டிடா ஃபொங்கி எனப்படும் பூஞ்சையில் இரு வகைகள் இருக்கின்றன. ஒன்று அவரிஸ்; மற்றொன்று அல்பிகன்ஸ். இரண்டும் மனிதர்களைக் கொல்லக்கூடியவை எனவும் இந்திய மருத்துவத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை,நுரையீரலைப் பாதிக்கும் அஸ்பர்கிலஸ் எனப்படும் பூஞ்சைக் கூட்டம், மனிதர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள மருத்துவமனைகளில் அனைத்து நோய்களுக்கும் 'ஸ்டீராய்டு'தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், அதன் மூலம் அங்கு யாருக்கும் கருப்பு பூஞ்சை நோய் ஏற்படவில்லை.

எனவே, இந்தியாவில் இதற்கான காரணம் குறித்து ஆய்வு மேற்கொள்ள 13 மருத்துவ வல்லுநர்கள் குழுவொன்று தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, நோய் எதிர்ப்பு சக்தி யாருக்கு குறைவாக இருக்கிறதோ, அவர்களுக்கு பூஞ்சை தொற்று பாதிக்கும். குறிப்பாக, புற்று நோயாளிகள், மாற்று உறுப்பு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். இ

இந்த கறுப்புப் பூஞ்சை தொற்றுநோய், மூக்கிலும் வரலாம்; நுரையீரலிலும் வரலாம்; இரவு தூங்கும் போது, எதிர்பாராமல் ஒற்றை தலைவலி வரும். சிலருக்கு முகத்தில் ஒரு பக்கம் மரத்து போகும்; தொட்டால் உணர்வு குறைந்து இருக்கும். மூக்கடைப்பு, மூக்கில் இருந்து மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு நிறத்தில் சளி வரலாம். இது தான் ஆரம்ப அறிகுறிகள் என இந்திய மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் அடுத்த நிலை, கண்களை சுற்றி வீக்கம் வரும். கண்கள் புடைத்து முன்னால் வரும். கண்களின் அசைவுகள் குறித்து, பார்வை இரண்டிரண்டாக தெரியும். கண்கள் வரை பாதித்தால், பார்வை இழப்பையும் மூளைக்குச் சென்றால், உயிரிழப்பையும் ஏற்படுத்தலாம்.

அறிகுறி லேசாகத் தெரிந்ததும் உடனே காது, மூக்கு, தொண்டை டொக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும். சில மணி நேரம் தாமதித்தால் கூட, பாரிய ஆபத்தை விளைவிக்குமென வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

# தடுப்பு மருந்தைக் குழந்தைகளுக்கு செலுத்தி சோதிக்கும் திட்டம்

புனேயைச் சேர்ந்த சீரம் நிறுவனம், 'நோவாவாக்ஸ்' கொரோனாத் தடுப்பு மருந்தைக் குழந்தைகளுக்குச் செலுத்தும் பரிசோதனையை ஜூலையில் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஏற்கெனவே இம்முயற்சியை ஐதராபாத் பாரத் பயோடெக் நிறுவனம் 12 முதல் 18 வயதுவரையானோருக்கு ஆரம்பித்துள்ளது. 2 முதல் 6 வயது வரையுள்ளோருக்கும் 6 முதல் 12 வயது வரை உள்ளோருக்கும் நடத்தவுள்ளது. அத்தோடு சிறார்களுக்கு மூக்கின் வழியாக தடுப்பு மருந்து செலுத்தும் சோதனையையும்




நடத்திவருகின்றது,

இதேபோல் 'சைடஸ் கடிலா' நிறுவனமும் சைகோவ் டி எனப்படும் மருந்தை 12 முதல் 18 வயது வரையுள்ள பிரிவினருக்குச் செலுத்திச் சோதித்துள்ளது. 5 முதல் 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்குச் சோதனை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சென்னை:

# பிரபல 'யூடியூபர்' மதன் கைது



பிரபல யூடியூபரான மதன், தனது யூ டியூப் பக்கத்தில் தமிழகத்தில் தடை செய்யப்பட்ட பப்ஜி விளையாட்டின் மூலம் சிறுவர்களைத் தவறான பாதைக்குத் திசை திருப்புவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதே நேரத்தில் தன்னுடன் தொலைபேசியில் உரையாடும் இளம்பெண்களிடம் ஆபாசமான வார்த்தைகளைப் பேசுவதும் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து சென்னை புளியந்தோப்பு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திவந்த நிலையில், தலைமறைவாகிய மதனை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் தர்மபுரியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

ஏற்கெனவே மதனின் மனைவி கிருத்திகாவை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.


## புதுடெல்லி:

# கொரோனாவில் இருந்து மீளும் ஆண்களுக்கு அடுத்த அதிர்ச்சி

கொரோனா வைரஸ் ஆண்களின் விந்தணு செயல்பாட்டை சேதப்படுத்துவதோடு, விந்தணுக்களின் எண்ணிக்கையின் அளவு மற்றும் இயக்கம் ஆகியவற்றில் 50 சதவீதம் வரை பாதிப்புகளை ஏற்பட்டுத்தும் என்பதும் தெரியவந்துள்ளது.

கொரோனாவில் இருந்து மீண்டாலும் அதன் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதே பெரும் சவாலாக ஆகிவிட்ட நிலையில், உடலில் எங்கு வேண்டுமானாலும் இரத்தம் உறைதல் ஏற்படலாம், இதன் விளைவாக உடலின் கை,கால் போன்ற உறுப்புகளின் இழப்பு நேரிடலாம் என்றும் இதயம் நின்று போகலாம் எனவும் தொடர் மருத்துவ கண்காணிப்பு அவசியம் எனவும் மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது இதற்கான மருந்துகளைக் கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





திட்டமிடல், அனுபவம்:

# புட்டினை வென்ற பைடன்



முருகவேல் சண்முகன்
shanmugan10@gmail.com



சர்வதேச உலகில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கும் இடையிலான சந்திப்பு, சுவிற்ஸர்லாந்தில் புதன்கிழமை (16) நடந்தேறியிருந்தது.

1999ஆம் ஆண்டு, ரஷ்யாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற புட்டின், தனது பதவிக்காலத்தில் சந்திக்கும் ஐந்தாவது அமெரிக்க ஜனாதிபதி பைடன் ஆவார். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்டன், ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பராக் ஒபாமா, டொனால்ட் ட்ரம்ப் ஆகியோரை, ஜனாதிபதி புட்டின் சந்தித்துள்ளார். இதில், முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவை 2009ஆம் ஆண்டு சந்திக்கும்போது, புட்டின் பிரதமராக இருந்தபோதும், அப்போதும் ரஷ்யாவின் செல்வாக்குமிக்க தலைவராகவே கருதப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தான் இதுவரை சந்தித்த அமெரிக்க ஜனாதிபதிகளில், பழுத்த அனுபவமுடையவரை எதிர்கொண்ட ஜனாதிபதி புட்டின், முன்னையவர்களைச் சந்திக்கும்போது, 'இலகு நிலை'யில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால், இம்முறை தொழில் முறையில் ஜனாதிபதி என்ற அந்தஸ்து நிலையை ஆரம்பத்திலேயே வெளிக்காட்ட வேண்டியிருந்தது.

பதவியேற்ற காலத்தின் ஆரம்பத்திலேயே, ரஷ்ய ஜனாதிபதியைச் சந்திக்கிறார் என அமெரிக்கா ஜனாதிபதி பைடனுக்கு எதிரான விமர்சனங்கள் எழுந்திருந்திருந்தன. இந்நிலையில், 2018ஆம் ஆண்டு, ஜனாதிபதி புட்டினை, முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் சந்தித்தபோது, கிடைத்த அனுபவங்களே, இம்முறை சந்திப்பை வெற்றிகரமாக மாற்றுவதற்கான திட்டமிடலுக்கான ஆரம்பப் புள்ளியாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பின்லாந்தில் நடைபெற்ற, ஜனாதிபதி புட்டினுக்கும் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப்புக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களை சந்தித்திருந்தனர்.

அப்போது, 2016ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தலையிட்டதற்காக, ஜனாதிபதி புட்டினை ஜனாதிபதி ட்ரம்ப் சாடியிருக்கவில்லை என்பது பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இம்முறை சந்திப்பானது மிக உன்னிப்பாக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு இருந்தது. இச்சந்திப்புக்கான அழைப்பு, ஜனாதிபதி ஜோ பைடனால் விடுக்கப்பட்டிருந்ததானது, ஜனாதிபதி புட்டினுக்கு ஓர் அங்கிகாரத்தை வழங்கியிருந்தது. இருந்தபோதிலும், ஏனைய விடயங்கள் ஜனாதிபதி பைடனுக்கு சாதகமாகவே இடம்பெற்றிருந்தன.

தன்னைச் சந்திக்க வருவோரை, ஜனாதிபதி புட்டின் காக்க வைத்த சம்பவங்கள் பல, கடந்த காலங்களில் இடம்பெற்ற நிலையில், இம்முறை சந்திப்பு நிகழும் இடத்துக்கு முதலில் ஜனாதிபதி புட்டினே சென்றிருந்தார்.

ஜனாதிபதி புட்டினை, சுவிற்ஸர்லாந்து ஜனாதிபதி வரவேற்றிருந்தார். அடுத்த 15 நிமிடங்களில், ஜனாதிபதி பைடனின் வாகனத் தொடரணி சந்திப்பு இடத்துக்கு வந்திருந்தது.

இதேவேளை, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவுகள், எப்போதும் இல்லாதளவுக்கு மோசமடைந்துள்ள நிலையில், இச்சந்திப்பிலிருந்து பாரிய திருப்பங்கள் எதுவும் ஏற்படாது என்ற எதிர்பார்ப்பை மழுங்கடிக்கும் வகையில், திட்டமிடலாளர்கள் பாரிய வெற்றியைப் பெற்றிருந்தார்கள் எனக் கூற முடியும்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது, இணையவழித் தாக்குதல்கள், ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது, ஐக்கிய அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனுக்கு ரஷ்யத் தூதுவரை அடுத்த வாரம் அனுப்புவது, ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு ஐக்கிய அமெரிக்கத் தூதுவரை அடுத்த வாரம் அனுப்புவது என்பன பிரதான அம்சங்களாகக் காணப்பட்டிருந்தன.

இதில், அமெரிக்கா எண்ணெய் விநியோகக் கட்டமைப்புகள் மீது, மே மாதம் இணையவழித் தாக்குதலை ரஷ்யா நடத்தி, விநியோக நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில், "ரஷ்ய எண்ணெய் விநியோகக் கட்டமைப்பு மீது, இணையவழித் தாக்குதலை அமெரிக்கா நடந்தியிருந்தால், எப்பிடி இருந்திருக்கும்" என, புட்டினை அச்சுறுத்தும் வகையில், பைடன் கேட்டிருந்தார்.

"இதை அச்சுறுத்தலாக எடுக்க வேண்டாம்" என ஜனாதிபதி பைடன் தெரிவித்தபோதும், 'நீ அடித்தால், நானும் திருப்பி அடிப்பேன்' என்ற வகையிலேயே, அதன் இராஜதந்திரப் பொருள்கோடல் விளங்கிக்கொள்ளப்பட்டு இருந்தது.

எவ்வாறெனினும், ரஷ்யா மீது இணையவழித் தாக்குதல் இடம்பெற்றால், அது, நடைமுறையில் பாரிய எதிர்வினையை ஆற்றும் என்ற அச்சத்தில், இதுவரையில் அத்தெரிவுக்கு மேற்குலகம் சென்றதாகப் பதிவுகளில்லை.

இதேவேளை, உணவு, எண்ணெய், பாதுகாப்பு கட்டமைப்புகள் உள்ளடங்கலாக 16 கட்டமைப்புகள், இணையவழித் தாக்குதலுக்கு அப்பாற்பட்டவை என்ற பட்டியலை ஜனாதிபதி புட்டினிடம் ஜனாதிபதி பைடன் கையளித்ததாகக் கூறப்படுகிறது.

இதே பாணியில், சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்குடனான 2015ஆம் ஆண்டு சந்திப்பு ஒன்றின்போது, பட்டியல் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவும் கையளித்திருந்தபோதும், அவை எவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகக் காணப்பட்டன என்பது கேள்விக்குறி ஆகும்.

இந்நிலையில், ஜனாதிபதி பைடனின் நீண்ட கால வெளிநாட்டுக் கொள்கையான, 'நேரடியாக நபர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவது, பிரச்சினைகளுக்குத் தீர்வை அளிக்கும்' என்பதை, ஜனாதிபதி புட்டின் உடனான சந்திப்பின் பின்னர், ஜனாதிபதி பைடன் மீண்டும் ஒருமுறை சிலாகித்திருந்தார். ஆக, ஜனாதிபதி பைடனின் தனிப்பட்ட கொள்கையின் அடிப்படையில், அவருக்கு இந்தச் சந்திப்பு வெற்றியாகவே காணப்படுகின்றது.

இதேவேளை, இருவருக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர், முதலில் ஜனாதிபதி புட்டினே ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்தார். அதன் பின்னரே, ஜனாதிபதி பைடன் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். ஆகவே, முதலில் ஜனாதிபதி புட்டின் உரைத்த கருத்துகளை மறுத்துரைக்க, ஜனாதிபதி பைடனுக்கு சந்தர்ப்பம் காணப்பட்டிருந்தது.

அத்துடன் முக்கியமாக, ஜனாதிபதி புட்டினுடனான ஊடகவியலாளர் சந்திப்பில், ரஷ்யா அல்லாத வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்த போதும், ஜனாதிபதி பைடனின் சந்திப்பில் ரஷ்ய ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, ரஷ்யாவை 'கிறீமியா' பிரச்சினையின்போது, "பிராந்திய வல்லரசு" என வர்ணித்திருந்த நிலையில், தற்போது, உலக வல்லரசாகவே ரஷ்யாவை ஜனாதிபதி பைடன் குறிப்பிட்டு இருந்தமையானது, உள்நாட்டில் ஜனாதிபதி புட்டினின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பதற்கு வழி வகுக்கும் என நம்பப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி பைடனை "கட்டமைப்பு ரீதியானவர்" என்றும், "மொழி ஆழுமையுடன் பேசினார்" என்றும் ஜனாதிபதி புட்டின் குறிப்பிட்டிருந்தபோதும், இரண்டு நாடுகளின் நலன்கள் மீதான அனுகூல எதிர்பார்ப்பே இருவரிடமும் மேலோங்கி இருந்தது என்பது, 'வெள்ளிடை மலை'யாகத் தெரிந்தது.

இதையே, "இது நம்பிக்கை பற்றியது அல்ல; இது சுய விருப்பம் மற்றும் சுய விருப்பத்தை ஆராய்தல்" என, தனது இராஜதந்திர மொழியில் ஜனாதிபதி பைடன் குறிப்பிட்டிருந்தார்.

ஆக, இந்தச் சந்திப்பானது, அமெரிக்கா - ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தா விட்டாலும், அண்மைய எதிர்காலத்தில், மேலும் மோசமடையாமல் தடுக்கலாம் என நம்பலாம்.

பெட்டறியை விழுங்கிய

# 2 வயது குழந்தை பலி



மின்கலத்தை (பெட்டறி) விழுங்கிய இரண்டு வயது குழந்தை மரணமடைந்த சம்பவம், இங்கிலாந்தில் நடைபெற்றுள்ளது.

இதனையடுத்து, இங்கிலாந்தின் ஸ்டார்ப்போர்ட்ஷயர் குழந்தைகள் பாதுகாப்பு சபை, ஓர் அவசர எச்சரிக்கையை பெற்றோர்களுக்கு விடுத்துள்ளது.

அதில், 'இந்த இரண்டு வயதுக் குழந்தை மின்கலத்தை விழுங்கியதையடுத்து, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அறுவை சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளது'.

'பொத்தான் அளவிலான இந்தப் பெட்டறிகள் மிகவும் சக்திமிக்கவை. அதைக் குழந்தைகள் விழுங்கினால், மோசமாகப் பாதிப்பு அடையும் அல்லது உயிரிழக்கச் செய்யும் என்பதை அறிவீர்களா? ஆபத்தான இப்பொருட்களை குழந்தைகள் கைக்குக் கிட்டாத வகையில் பாதுகாத்து வையுங்கள். குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய சக்தி அதில் உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். வளர்ந்த பிள்ளைகளுக்கு அந்தத் தீமையைப் பற்றி விளக்குங்கள்' என்று, அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தையின் தாய், தன்னியக்கக் கருவியை (ரிமோட் கன்ட்ரோல்) கவனித்த போது அதில், பொத்தான் அளவிலான மின்கலம் காணப்படவில்லை.

ஆப்பர்ஸ் லீ என்னும் குழந்தையே, ரோயல் ஸ்டோக் பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையின் போது உயிரிழந்தது.



விமானம் தறையிறங்கும் வேளை

# விமானியின் மடியில் சிலந்தி

விமானமொன்று தறையிறங்கும் வேளையில், விமானத்தின் கெபின் கூரையிலிருந்து பெரிய சிலந்தியொன்று, விமானியின் மடியில் விழுந்ததால், அவரும் பயணிகளும் அதிர்ச்சியடைந்தனர்.

இந்தச் சிலந்தி, ஆபத்தில்லாதது என்று தெரிந்தபோதிலும், அது விழுந்தபோது, விமானி சற்று நடுக்கமுற்றார் என்று பயணிகள் தெரிவித்தனர்.


இந்தச் சிறிய ரக விமானம், அவுஸ்திரேலியாவின் கக்காடு தேசிய பூங்காவை சுற்றிவிட்டு, திரும்பி தரையிறங்க முனைகையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த விமானத்தின் பணியாளர்கள் சிலந்தி இருந்ததை, சில நாள்களுக்கு முன்னர் கண்டபோதிலும், அது வெளியில் சென்றிருக்கும் என்று கவனமின்றி இருந்துள்ளனர்.

விமானத்துக்குள் சிலந்தியால் இந்த அதிர்ச்சி ஏற்பட்டபோதும், விமானம் எவ்வித பாதிப்புமின்றி தரையிறங்கியது.

வளர்ப்பு மகளைக் காப்பாற்ற

# ஆற்றில் மூழ்கிய 'ஹீரோ' தந்தை



தந்தையொருவர் தனது வளர்ப்பு மகளான 19 மாத குழந்தை, ஆற்றில் தவறி விழுந்து உயிருக்குப் போராடிய போது, அதைக் காப்பாற்ற ஆற்றில் குதித்து நீரில் மூழ்கி பலியானார்.

பிரித்தானியாவில் நிலவும் கடும் வெப்பத்தை தணித்துக் கொள்ளும் வகையில், ஒரு குடும்பத்தினர் டெவனில் உள்ள எர்மோ ஆற்றுக்கு குளிக்கச் சென்றுள்ளனர். அப்பொழுது தன் வளர்ப்பு மகளான 19 மாதங்களேயான குழந்தை ஆற்றில் தவறி விழுந்து உயிருக்குப் போராடியதைக் கண்டு, ரேஸா எனும் இந்தத் தந்தை, அதனைக் காப்பாற்ற ஆற்றில் குதித்த போதே நீரில் மூழ்கி பலியானார். எனினும், அவர் குழந்தையை, காப்பாற்றிவிட்ட நிலையில் அது வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டது. இவருக்கு அஞ்சலி செலுத்தும் போது, இவர் ஒரு சுயநலமற்றவர் என்றும், மற்றவர்களுக்கு ஆபத்தின் போது, உதவுவதற்கு முன்னிற்பவர் என்றும் பலரும் தெரிவித்தனர்.

எஜமானர்களைத் துவம்சம் செய்த எருமை

# கண்ணெதிரே கணவன், மகனைப் பறிகொடுத்த பெண்



பெண்ணொருவரின் கண் முன்னாலேயே, அவரின் கணவர், மகன் ஆகியோரை எருமையொன்று கோரமாகத் தாக்கிக் கொன்ற சம்பவம், இங்கிலாந்தின் சௌத் வேல்ஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜொஸப்பின் என்னும் பெண், தன் கணவனை எருமை கோரமாகத் தாக்கிக் கொல்வதை, செய்வதறியாது திகிலுடன் பார்த்துக்கொண்டிருக்கையில், அவரைக் காப்பாற்றுவதற்குச் சென்ற அவரின் 19 வயது மகனையும் அந்த எருமை கோரமாகத் தாக்கியது.

திகிலடைந்த நிலையிலும் துயரத்திலும் இது பற்றி அந்தப் பெண் கூறுகையில், "சுமார் ஒரு தொன் எடையுள்ள அந்த எருமை, எனது கணவனை சுழற்றி எடுத்து, அவரை உணர்வற்ற நிலைக்குக் கொண்டுசென்றது" என்றார்.

இவர்களுடைய மகனான பீட்டர் எனும் 19 வயது இளைஞன், தனது தந்தையை காப்பாற்ற முயற்சிக்கையில், அவரையும் எருமை கோரமாகத் தாக்கி சேற்றில் இழுத்துச் சென்றது.

விவசாயியும் வர்த்தகருமான 57 வயதான ராவ்ப் எனும் இந்த நபர், 9 ஏக்கரில் பண்ணை நடத்தி வந்துள்ளார். இந்தப் பண்ணையில் உள்ள யோலோ என்னும் எருமையே, இவர்களைத் தாக்கிக் கொன்றுள்ளது. எருமை அவரைத் தாக்கி, கழுத்தில் கொம்பால் குத்தியதையடுத்து அவர், ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அங்கு அவர் காலமானார்.

இவரின் குடும்பம் எருமைப் பாலில், ஆடம்பர சவர்க்காரம், அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்து வந்துள்ளது. இவர்களைத் தாக்கிய அந்த எருமையை அவர்கள், அது கன்றாக இருந்த காலத்திலிருந்தே வளர்த்து வந்துள்ளனர். தந்தையையும் மகனையும் தாக்கிய அந்த எருமையின் கவனம், மகளான இஸபல் மீதும் திரும்பியதையடுத்து, அவரையும் அது மோசமாகத் தாக்கியுள்ளது.

பண்ணை வீட்டில் மனைவி சமையலில் ஈடுபட்டிருந்த போது, அவரின் மகள் இஸபெல் அலறும் சத்தம் அவருக்குக் கேட்டுள்ளது.

"யோலோ, டடியை இழுத்துச் செல்கின்றது" என அவள் கத்தியிருக்கிறாள். உடனே அங்கு வந்த தாய், கணவனை எருமை சுழற்றி எடுப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். அப்பொழுது மகன் பீட்டர், ஓர் இரும்புக் கம்பியை எடுத்துக்கொண்டு போய், எருமையைத் தாக்கி தந்தையைக் காப்பாற்ற முனைந்தபோதே, எருமை அவரையும் தாக்கி இழுத்துச் சென்றுள்ளது.

ஜொஸப்பின் இதுபற்றி மேலும் கூறுகையில், கணவர் அருகில் செல்ல விடாமல் பொலிஸார் என்னை தூரத்தில் அமர்த்தினர். எனக்குப் புரிந்தது என் கணவர் இறந்துவிட்டார் என்று. அன்று மாலையே மகனும் இறந்துவிட்டார் என்ற தகவலும் கிடைத்தது. இவ்வாறு விவரித்த அந்தப் பெண், மிகுந்த அதிர்ச்சியடைந்த நிலையிலும், துயரத்துடனும் காணப்படுகின்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 19 ஜூன் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.